# வருடாந்த முன்னேற்ற அறிக்கை

# 2012



தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்

**தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்**

# வருடாந்த முன்னேற்ற அறிக்கை

# 2012

**தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்,**

**த.பெ.இல. 14,பேராதனை**


## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | எமது முன்னேற்றம் ஒரே பார்வையில் | பக்கம் 01 |
| 2. | அறிமுகம் | பக்கம் 05 |
| 3. | பணியாளர் விபரம் | பக்கம் 09 |
| 4. | எமது அடைவுகள் | பக்கம் 11 |
| 5. | திணைக்களத்தின் கீழ் இயங்கும் தாவரவியல் பூங்காக்களும் அலகுகளும் | பக்கம் 19 |
| 6. | அயன வலயத்தின் மிக்க அழகான தாவரவியல் பூங்காக்களை நோக்கி | பக்கம் 33 |
| 6.1. | தாவரங்களின் வெளிவாரிப் பேணுகை | பக்கம் 33 |
| 6.2. | பூச்செடிச் செய்கை அபிவிருத்தி | பக்கம் 46 |
| 6.3. | கல்வி மற்றும் பயிற்சி | பக்கம் 58 |
| 6.4. | பூங்காக்களின் வசதிகளை மேம்படுத்துவதனூடு சுற்றுலாத்துறையை ஊக்குவித்தல் | பக்கம் 59 |
| 7. | விஷேட நிகழ்வுகள் | பக்கம் 63 |
| 8. | திணைக்களத்தால் வழங்கப்படும் ஆலோடனை சேவைகள் | பக்கம் 67 |
| 9. | ஏனைய அலகுகளின்/ நிகழ்ச்சித் திட்டங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் | பக்கம் 69 |
| 9.1. | அதிமேதகு ஜனாதிபதி மற்றும் மாண்புமிகு பிரதமர் ஆகியோரது வாசஸ்தலப் பூங்காக்கள் | பக்கம் 69 |
| 9.2. | பொது நலவாய போர் சமாதிகள் | பக்கம் 70 |
| 9.3. | தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம் | பக்கம் 71 |
| 9.4. | மீகல்லாவ பசுமை இல்லம் | பக்கம் 72 |
| 10. | வாசிகசாலை வசதிகளை மேம்படுத்துதல் | பக்கம் 73 |
| 11. | பணியாளர் இட மாற்றம், ஓய்வு, பதவியுயர்வு மற்றும் பயிற்சிகள் | பக்கம் 75 |
| 12. | பிரசுரிக்கப்பட்ட ஆய்வறிக்கைகள் | பக்கம் 77 |
| 13. | 2013ம் ஆண்டுக்கு திட்டமிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் | பக்கம் 73 |

**முன்னேற்றம் ஒரே பார்வையில்**


**1.1 2012ன் வருமானம்**

- நுழைவுக் கட்டணம், தாவர விற்பனை மற்றும் வாடகைகள் மூலம் 2012 இல் ரூபா 382.8 மில்லியன்கள் மொத்த இலாபமாக பெறப்பட்டது. முன்னைய வருடத்தோடு ஒப்பிடும் போது (ரூபா 353.4 மில்லியன்) இது 8% அதிகரிப்பாகும்.




**1.2 பார்வையாளர் பற்றிய விபரம்**

இவ்வருடமும் பார்வையாளர் எண்ணிக்கை 02 மில்லியன்களை விடவும் அதிகமாகும். (2,191,459) வெளிநாட்டுப் பார்வையாளர் எண்ணிக்கை (259,545) கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது (236,763) பத்து வீத அதிகரிப்பை காட்டுகிறது.



### 1.3 செலவுகள் 2012

- மூன்று பிரதான பூங்காக்களதும் ஏனைய அலகுகளதும் அபிவிருத்திப் பணிகள் திட்டமிட்டபடி நிறைவேற்றப்பட்டு 98% மொத்த நிதி முன்னேற்றம் பெறப்பட்டது.

| விபரம் | தேறிய ஒதுக்கீடு (ரூபா மில்) | மொத்தச்செலவு (ரூபா மில்) | செலவு வீதம் |
|---|---|---|---|
| **மூலதனச் செலவு** | 327.8 | 311.5 | **95%** |
| **மீண்டெழும் செலவு** | 174.8 | 174.3 | **100%** |

### 1.4 விஞ்ஞான நடவடிக்கைகள்

- திட்டமிட்ட படி விஞ்ஞான நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டு, நாட்டில் பூச்செடி செய்கையை அபிவிருத்தி செய்தல், தாவர வகைப்படுத்தல் மற்றும் முறைமைகளுடன் தொடர்பான பல ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. பொது மக்களில் பல் வேறு குழுக்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள், தாவரங்களை கண்டறிதல் மற்றும் பயிரிடல் நிகழ்ச்சித்திட்டங்களும் திட்டமிட்டபடி மேற்கொள்ளப்பட்டன.

| | |
|---|---|
| மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் (பூச்செடி செய்கை, தாவர வகைப்படுத்தல் போன்றன) | 14 |
| பிரசுரிக்கப்பட்ட ஆய்வு கட்டுரைகள் | 14 |
| பூங்காக்களில் மக்களுக்கு வழங்கப்ப்ட்ட பயிற்சிகள் | |
| உயிரியல் பல் வகைமை பேணல் | 523 |
| தாவரப் பேணுகை | 1,500 |
| பூச்செடி செய்கை | 10,578 |
| நில வடிவமைப்பு | 1,232 |
| தாவர முறைமை மற்றும் தாவரக் கய முகாமைத்துவம் | 698 |
| 3 மாத டிப்ளோமா | 76 |
| பூங்காக்களில் தாவர உற்பத்தி | 398,566 |
| தாவர விற்பனை | 202,416 |
| கள ஆய்வுப் பயணங்கள் | 18 |
| பூங்காக்களின் | 443 |

| | |
|---|---|
| மரத்தோட்டங்களுக்கு சேர்க்கப்பட்ட புதிய மரங்கள் | |
| வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் | |
| தேசிய சிவப்பு பட்டியலிடல் செயற்திட்டம் | தேசிய சிவப்பு தரவுப் புத்தகத்தை தயாரிப்பதற்கான தரவுகளைத் திரட்டலும் வகைகளை மதிப்பிடலும் லேும் சர்வதேச சிவப்புப் பட்டியலுக்கான வகைகளை மதிப்பிடலும் ஆகிய பணிகள் சுற்றாடல் அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டதோடு தேசிய சிவப்புப் பட்டியல் வெளியிடப்பட்டது. |
| சர்வதேச செயலமர்வுகள் | ஐக்கிய அமெரிக்காவின் யேல் பல்கலைக் கழகத்துடன இணைந்து தென்னாசியாவின் ஈரப் பசுமைப் பிராந்தியங்களின் மனிதர்வாழ் பகுதிகளிலுள்ள வனங்களை புனரமைப்பது தொடர்பான சர்வதேச மாநாட்டை பேராதனை அரச தாவரவில் பூங்கா ஏற்பாடு செய்து நடாத்தியது. |
| தேசிய செயலமர்வுகள் | இலங்கையின் ப்ரயோ.்.பைட் பல்வகைமை பற்றிய முதலாவது தேசிய செயலமர்வு பேராதனை அரச தாவரவியல் பூங்காவில் நடைபெற்றது. |
| தாவரவியல் கணக்கெடுப்பு | தாவர கண்டறிதல்கள், குறிப்பாக அழிவுறும் அபாயத்துக்குட்பட்ட உலர் மற்றும் ஈர வலய தாவர மாதிரிகளை சேகரித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. |
| பூச்செடிச் செய்கை தொடர்பான தேசிய ஆய்வரங்கு | பூச்செடிச் செய்கை ஆய்வு பற்றிய 05ஆவது தேசிய ஆய்வரங்கு 2012 டிசம்பர் 17ம் திகதி விவசாய ஆய்வுக் கொள்கை சபையுடன் இணைந்து நடாத்தப்பட்டது. |

## அறிமுகம்.

2

### 2.1. பின்னணி.

இலங்கையின் அணைத்து சேிய தாவரவியல் பூங்காக்களும் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தால் நிர்வகிக்கப்படுகின்றன. இத்திணைக்களத்தின் தேசிய தாவரக் கயம் தாவர சான்றுப்படுத்தல் பணிகளையும் தாவர வகைப்படுத்தல் குறித்த ஆய்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் தாவரவியல் விஞ்ஞானத்தின் ஏனைய பணிகளையும் மேற்கொள்கின்றது. பூச்செடிச் செய்கை ஆய்வு மற்றும் அபிவிருத்தி அலகானது பூச்செடிச் செய்கை ஆய்வுகளில் ஈடுபடுவதன் மூலம் நாட்டில் பூச்செடிச் செய்கைக்கான வர்த்தக வாய்ப்புக்களை ஊக்குவிக்கும் பணியை பல்வேறு ஊடகங்கள் / பணிகள் / நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் ஊக்குவிக்கிறது.

இத்திணைக்களத்தின் கீழ் இயங்குகின்ற அனைத்துத் தாவரவியல் பூங்காக்களும் 19ம் நூற்றாண்டின் ஆரம்ப வருடங்களில் ஆரம்பிக்கப்பட்ட முன்னோடி தாவரவியல் நிறுவனங்களாகும். இப்பூங்காக்கள் தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் தாவரச் சேமிப்புக்கும் ஆய்வுக்குமான – குறிப்பாக அயன வலயத்துக்குரிய தென்கிழக்காசிய பிராந்தியத்தைச் சார்ந்த தாவரங்கள் – சிறப்பு மத்திய நிலையங்களாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. முழு உலகிலும் நன்கு அறியப்பட்டுள்ள இப்பூங்காக்களை வருடந்தோறும் 1.9 மில்லியனுக்கும் அதிகமான பார்வையாளர்கள் தரிசிக்கின்றனர்.

பேராதனை, அரச தாவரவியல் பூங்கா (1821), ஹக்கல தாவரவியல் பூங்கா (1861), கம்பஹா, ஹெனரத்கொட தாவரவியல் பூங்கா (1876) ஆகியன பிரித்தானியர்களால் ஆரம்பிக்கப்பட்டன. முதலாவது மூலிகைத் தாவரப் பூங்கா 1950ல் ஆரம்பிக்கப்பட்டது. அத்தோடு உலர் வலய மற்றும் ஈரவலய தாவரவியல் பூங்காக்கள் முறையே அம்பாந்தோட்டையிலும், அவிசாவலையிலும் 2011ம் ஆண்டில் திறக்கப்பட்டுள்ளன.

1912ல் விவசாயத் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து தேசிய தாவரவியல் பூங்காக்கள் தினைக்களம் அதன் ஒரு பிரிவாக இயங்கயது. 2006ல் ஒரு பணிப்பாளர் நாயகத்தின் கீழ் தனியான திணைக்களமாக அது ஆக்கப்பட்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் தாவரங்களின் பாதுகாப்புக்கும் ஆய்வுக்கும் பொறுப்பான முன்னோடி நிறுவனமாக இயங்கி வருகின்றது.

### 2.2 தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் இலக்கு

இலங்கையின் தாவரப் பாதுகாப்பிற்கான பிரதான மையமாக அமைந்து, உள்நாட்டுப் பொருளாதார மேம்பாட்டுக்காக முழுமையான பங்களிப்பை வழங்குவதுடன், தாவரவியல் விஞ்ஞான ரீதியாகவும் அழகியல் ரீதியாகவும் உலகின் மிகச்சிறந்த அயன மண்டல வலய தாவரவியல் பூங்காவாக 2015ம் ஆண்டளவில் ஆகுதல்

### 2.3 தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் பணி

இலங்கையின் இயற்கையானதும் வளமானதுமான சூழலில் காணப்படும் தாவரவியல் பற்றிய கற்கையாய்வு, நிலையான பாதுகாப்பு மற்றும் பொழுதுபோக்குக்கான சந்தர்ப்பங்களை மக்களுக்கு வழங்குதல்

### 2.4 தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் செயற்பாடுகள்

- இலங்கையின் தாவரவியல் பல்வகைத் தன்மையினை பாதுகாப்பதில் வெளிவாரி பாதுகாப்பு முறைகளை செயல்வலுப் பெறச் செய்தல் தொடர்பில் தேவையான திட்டங்களை வகுத்தலும் செயல்படுத்தலும்
- கல்வி மற்றும் தொடர்பாடல் முறைகளை பயன்படுத்தி இலங்கையின் தாவர வளங்கள் சம்பந்தமாகவும் தாவர வளங்களுடன் தொடர்புற்றுக் காணப்படும் பல்வேறு வகையான கைத் தொழில் நடவடிக்கைகளுக்கு தேவைப்படும் சரியான தகவல்களையும் கலையறிவினையும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- இலங்கையில் பூச்செடிச் செய்கைக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான பல்வேறு ஆராய்ச்சிகள் மற்றும் தொழில் நுட்ப முறைகளை பரீட்சித்தல் மற்றும் செயல்படுத்துதல்.
- இலங்கையின் தேசிய தாவரவியல் பூங்காக்களை உயர்தரத்தில் பராமரித்தல்.
- பொருத்தமான இடங்களில் புதிய தாவரவியல் பூங்காக்களை உருவாக்குவதற்குத் தேவையான அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்தல்.
- அலங்கார தாவரவியல் ஆய்வினை இலங்கையில் விஸ்தரிப்பதற்குத் தேவையான ஆராய்ச்சிகள் மற்றும் தொழில்நுட்ப வேலைத்திட்டங்களை அமுலாக்குதல்.
- இலங்கையின் வரலாற்று முக்கியத்துவம் மிக்க தாவரங்களை பாதுகாப்பதற்குத் தேவைப்படும் தொழில் நுட்ப ஆலோசனைககளை வழங்குதல்.
- அநுராதபுரம் புனித அரச மரத்தின் ஆரோக்கியத்தைப் பேணுதல்.

**1.3. இத்திணைக்களத்தின் கீழ் இயங்கும் நிறுவனங்களும் அலகுகளும்**

1. அரச தாவரவியல் பூங்கா, பேராதனை
2. ஹக்கல தாவரவியல் பூங்கா, ஹக்கல
3. ஹெனரத்கொட தாவரவியல் பூங்கா – கம்பஹா
4. தேசிய தாவரவியல் கூடம் - பேராதனை
5. மூலிகைப் பூங்கா – கனேவத்த
6. உலர் வலய தாவரவியல் பூங்கா, மிரிஜ்ஜவில, அம்பாந்தோட்டை
7. சீதாவாக்கை ஈரவலய தாவரவியல் பூங்கா இலுக்ஓவிட்ட, அவிசாவலை.
8. பூச்செடிச் செய்கை ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவு பேராதனை.
9. கல்வி நிலையம் - பேராதனை
10. ஜனாதிபதி வாசஸ்தலப் பூங்கா – கொழும்பு
11. ஜனாதிபதி வாசஸ்தலப் பூங்கா – கண்டி
12. ஜனாதிபதி வாசஸ்தலப் பூங்கா - நுவரெலியா
13. ஜனாதிபதி மாளிகைப் பூங்கா, அநுராதபுரம்
14. அலரி மாளிகைப் பூங்கா – கொழும்பு
15. பிரதமர் அலுவலகப் பூங்கா – கொழும்பு
16. பிரதமர் வாசஸ்தலப் பூங்கா – நுவரெலியா
17. விசும்பாய, பிரதமர் வாசஸ்தலப் பூங்கா
18. சுவஹஸ் மல் செவன சுதந்திர சதுக்கம். கொழும்பு
19. பூங்கா உதவியாளர் அலுவலகம். நாரஹேன்பிட
20. பொதுநலவாய போர் சமாதி. பிடகந்த, கண்டி
21. பொதுநலவாய போர் சமாதி – பொரல்ல
22. பொதுநலவாய போர் சமாதி – ஜாவத்த
23. பொதுநலவாய போர் சமாதி – நிலாவெளி, திருகோணமலை
24. பசுமை இல்லம், மீகல்லாவ(அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன)

3

**பணியாளர் விபரம்**

அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கை : 700

தற்போதுள்ள பணியாளர் எண்ணிக்கை : 661

தற்போதைய பணியாளர் எண்ணிக்கையான 661 இல் 545 பேர் நிரந்தர ஊழியர்களாவர். அவர்களில் 21 பேர் பதவி நிலை உத்தியோகத்தர்களாவர். 34 பேர் இலங்கை தொழிநுட்ப சேவை அலுவலர்களாவர். 03 பேர் பட்டதாரி விவசாய மேற்பார்வை அலுவலர்கள். 22 பேர் பட்டதாரி நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள். 42 பேர் முகாமைத்துவ சேவை அலுவலர்கள். 105 தோட்ட ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுகின்றனர். 2007ம் ஆண்டு அமைச்சரவை தீர்மானமொன்றின் படி 11 அலுவலர்கள் சமுர்தி அதிகார சபையிலிருந்து இத்திணைக்களத்திற்கு மாற்றலாகி வந்தனர்.

### 3.1 ஊழியர் அமைப்பு

| வகை | அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கை | தற்போதுள்ள பணியாளர் எண்ணிக்கை |
|---|---|---|
| **சிரேஷ்ட தரம்** | 33 | 16 |
| **மூன்றாம் நிலை** | 6 | 5 |
| **இரண்டாம் நிலை** | 145 | 101 |
| **ஆரம்ப நிலை** | 516 | 423 |
| **சமுர்தி அதிகார சபையிலிருந்து மாறறலாகி வந்தோர்** | - | 11 |
| **ஒப்பந்த ஊழியர்கள்** | - | 105 |
| **மொத்தம்** | **700** | **661** |

### 3.2. சிரேஷ்ட அலுவலர்கள்

| பதவி | அலுவலர் பெயர் |
|---|---|
| **பணிப்பாளர் நாயகம்** | கலாநிதி. டீ. எஸ். ஏ விஜேசுந்தர |
| **பணிப்பாளர் (அபிவிருத்தி)** | திரு. டீ. எச். பீ பெரமுனுகம |
| **பணிப்பாளர் (ஆய்வு மற்றும் தொழிநுட்ப பரிவர்த்தனை)** | திரு. கே. என். யாபா |
| **பணிப்பாளர் (நிருவாகம்)** | திருமதி ஐ. டப்ளியு. எம். சீ. கே. இலங்ககோன் |


4

## சாதனைகள்

### 4.1. பார்வையாளர்கள்


பேராதனை, ஹக்கல, கம்பஹா ஆகிய தாவரவியல் பூங்காக்கள் உயர் தரத்தில் பேணப்பட்டதோடு 2,191,486 பேர் (1,931,914 உள்நாட்டவர்களும் 259,572 வெளிநாட்டவர்களும்) இவ்வருடம் இவற்றைத் தரிசித்தனர். இது முன்னைய வருடத்தை விட அதிகமானதாகும். அவ்வாறே வெளிநாட்டுப் பார்வையாளர்களின் எண்ணிக்கை முன்னைய வருடத்தோடு ஒப்பிடும் போது 10% வளர்ச்சியைக் காட்டுகிறது.

| பார்வையாளர் வகை | பேராதனை | ஹக்கல | கம்பஹா | மொத்தம் |
|---|---|---|---|---|
| உள்நாடு வளர்ந்தோர் | 868,663 | 411334 | 177204 | 1,457,201 |
| உள்நாடு சிறுவர் | 272,640 | 168295 | 16439 | 457,374 |
| சிரேஷ்ட பிரஜைகள் | 8,155 | 8114 | 1070 | 17,339 |
| மொத்த உள்நாட்டு பார்வையாளர்கள் | 1,149,458 | 587743 | 194713 | 1,931,914 |
| வெளிநாடு வளர்ந்தோர் | 234,316 | 11318 | 240 | 245,874 |
| வெளிநாடு சிறுவர் | 8,991 | 806 | 3 | 9,800 |
| வெளிநாட்டு மாணவர்கள் | 3,506 | 392 | | 3,898 |
| மொத்த வெளிநாட்டு பார்வையாளர்கள் | 246,813 | 12,516 | 243 | 259,572 |
| மொத்த பார்வையாளர் எண்ணிக்கை | **1,396,271** | **600,259** | **194,956** | **2,191,486** |




- நுழைவுக் கட்டணம், தாவர விற்பனை மற்றும் வாடகைகள் மூலம் 2012 இல் ரூபா 382.8 மில்லியன்கள் மொத்த இலாபமாக பெறப்பட்டது. முன்னைய வருடத்தோடு ஒப்பிடும் போது இது 8% அதிகரிப்பாகும். (ரூபா 353.4 மில்லியன்) பார்வையாளர்கள் மூலம் பெறப்பட்ட வருமானம் ரூபா. 356.6 மில்லியன். வேறு மூலங்களிலிருந்து பெறப்பட்ட வருமானம் ரூபா. 26.2 மில்லியன்.


| **அலகுகள்** | **மொத்த வருமானம்** |
|---|---|
| அரச தாவரவியல் பூங்கா – பேராதனை | 326,220,159.53 |
| தாவரவியல் பூங்கா - ஹக்கல | 40,112,442.40 |
| தாவரவியல் பூங்கா – கம்பஹா | 14,716,622.00 |
| மூலிகைத் தாவரப் பூங்கா – கனேவத்த | 583,552.00 |
| உலர் வலய தாவரவியல் பூங்கா – அம்பாந்தோட்டை | 294,060.00 |
| சுவஹஸ்மல் செவன தாவர நாற்று மேடை | 58,310.00 |
| ஈர வலய தாவரவியல் பூங்கா-அவிசாவலை | 809,400.00 |
| மொத்தம் | **382,794,545.93** |




**4.3. தேசிய தாவரவியல் பூங்காக்களில் உற்பத்தி செய்யப்பட்ட தாவரங்களிலிருந்து விற்பனை செய்யப்பட்ட தாவரங்களின் எண்ணிக்கையும் அதன் மூலம் பெறப்பட்ட வருமானமும்**




**4.4. திணைக்களத்தின் மொத்த வருமானத்தில் துறைசார் வருமான வீதங்கள்.**




### 4.5. செலவும் வருமானமும்




வரைபில் காட்டப்பட்டுள்ளவாறு திணைக்களத்தின் வருமானத்திலும் இலாப அளவிலும் அதிகரிப்பு ஏறபட்டுள்ளது.

### 4.6. 2005 – 2012 காலப் பகுதியில் தியைக்களத்தின் இலாப அளவில் ஏற்பட்ட மாற்றங்கள். (மூலதனச் செலவினங்கள் நீங்கலாக)



### 4.7. அரச அலுவலர்களுக்கான முற்பணக் கணக்கு விபரங்கள்

**வகை இல: 32201**

| | செலவுகளுக்கான உயர் எல்லை ரூ. | பெறுகைகளுக்கான அதிகுறைந்த எல்லை ரூ. | பற்று மீதிக்கான உயர் எல்லை ரூ. |
|---|---|---|---|
| வரவு செலவுத் திட்ட உத்தேசம் 2012 | **20,000,000.00** | **8,500,000.00** | **60,000,000.00** |
| மீளமைக்கப்பட்ட எல்லைகள் | - | - | - |
| உண்மைத் தரவு | **14,320,346.00** | **12,652,989.00** | **47,709,865.00** |

### 4.8. செலவுகள்

### 4.8.1 மூலதனச் செலவுகள்

| உப செயற் திட்டம் | விடயக் குறியீடு | விடய விபரம் | தேறிய ஒதுக்கீடு 2012 ன் வரவு செலவுத் திட்டம் ரூ. | மொத்தச் செலவு ரூ. | மீதமுள்ள ஒதுக்கீடு ரூ. | % |
|---|---|---|---|---|---|---|
| | | **கட்டிடங்களையும், கட்டமைப்புக் களையும் புனர் நிர்மாணம் செய்தல்** | | | | |
| 0 | 2001 | கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 1,820,000.00 | 1,393,343.00 | 426,657.00 | 77% |
| 0 | 2002 | பொறித் தொகுதி, இயந்திரங்கள், உபகரணங்கள், | 273,000.00 | 270,228.00 | 2,772.00 | 99% |
| 0 | 2003 | வாகனங்கள் | 455,000.00 | 317,435.00 | 137,565.00 | 70% |
| | | **மூலதனச் சொத்துக்களைப் பெற்றுக் கொள்ளல்** | | | | |
| 0 | 2101 | வாகனங்கள் | 0 | 0 | 0.00 | |
| 0 | 2102 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 455,000.00 | 436,370.00 | 18,630.00 | 96% |

| உப செயற் திட்டம் | விடயக் குறியீடு | விடய விபரம் | தேறிய ஒதுக்கீடு 2012 ன் வரவு செலவுத் திட்டம் ரூ. | மொத்தச் செலவு ரூ. | மீதமுள்ள ஒதுக்கீடு ரூ. | % |
|---|---|---|---|---|---|---|
| 0 | 2103 | பொறித் தொகுதி, இயந்திரங்கள், உபகரணங்கள், | 318,000.00 | 276,168.00 | 41,832.00 | 87% |
| 0 | 2104 | கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 910,000.00 | 199,472.00 | 710,528.00 | 22% |
| 0 | 2105 | காணி மற்றும் காணி மேம்படுத்தல்கள் | 1,365,000.00 | 1,340,401.00 | 24,599.00 | 98% |
| | | **மூலதன மாற்றுகைகள்** | | | | |
| 0 | 2201 | தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம் | 81,900,000.00 | 81,900,000.00 | 0.00 | 100 % |
| 0 | 2401 | பயிற்சி மற்றும் இயலுமை விருத்தி | 91,000.00 | 82,359.00 | 8,641.00 | 91% |
| | | **விஷேட செயற் திட்டங்கள்** | | | | |
| 1 | 2105 | கம்பஹா தாவரவியல் பூங்கா<br>கனேவத்த மூலிகைப் பூங்கா | 27,300,000.00 | 27,094,719.00 | 205,281.00 | 99% |
| 2 | 2105 | பூச்செடிச் செய்கை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 35,490,000.00 | 33,674,008.00 | 1,815,992.00 | 95% |
| 3 | 2105 | உலர் வலய தாவரவியல் பூங்கா | 136,500,000.00 | 126,486,173.00 | 10,013,827.00 | 93% |
| 4 | 2105 | அவிசாவலை தாவரவியல் பூங்கா | 36,400,000.00 | 35,499,926.00 | 900,074.00 | 98% |
| 6 | 2105 | பூச்செடிச் செய்கை ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் | 4,550,000.00 | 2,492,793.00 | 2,057,207.00 | 55% |
| | | **மொத்தம்** | **327,827,000.00** | **311,463,395.00** | **16,363,605.00** | **95%** |

### 4.8.2. மீணடெழும் செலவுகள்

| விடயக் குறியீடு | விடய விபரம் | தேறிய ஒதுக்கீடு 2012 ன் வரவு செலவுத் | மொத்தச் செலவு ரூ. | மீதமுள்ள ஒதுக்கீடு | % |
|---|---|---|---|---|---|
| | **ஆட்களுக்கான கொடுப்பனவுகள்** | | | | |
| 1001 | சம்பளங்களும் வேதனங்களும் | 87,900,000.00 | 87,821,739.27 | 78,260.73 | 100% |
| 2002 | மேலதிக நேர வேலை மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு | 4,250,000.00 | 4,207,052.86 | 42,947.14 | 99% |
| 1003 | வேறு கொடுப்பனவுகள் | 50,315,000.00 | 50,314,127.67 | 872.33 | 100% |
| | **பிரயாணச் செலவுகள்** | | | | |
| 1101 | உள்நாடு | 1,300,000.00 | 1,284,339.20 | 15,660.80 | 99% |
| 1102 | வெளிநாடு | 50,000.00 | 46,437.50 | 3,562.50 | 93% |
| | **வழங்கல்கள்** | | | | |
| 1201 | காகிதாதிகளும் அலுவலகத் தேவைகளும் | 700,000.00 | 695,495.16 | 4,504.84 | 99% |
| 1202 | எரிபொருள் | 2,500,000.00 | 2,468,614.00 | 31,386.00 | 99% |
| 1203 | உணவு மற்றும் சீருடை | 165,000.00 | 134,453.00 | 30,547.00 | 81% |
| 1205 | வேறு | 3,000,000.00 | 2,986,639.15 | 13,360.85 | 100% |
| | **நடத்துகைச் செலவுகள்** | | | | |
| 1301 | வாகனங்கள் | 1,300,000.00 | 1,285,969.90 | 14,030.10 | 99% |
| 1302 | பொறித் தொகுதி, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 550,000.00 | 544,533.59 | 5,466.41 | 99% |
| 1303 | கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 350,000.00 | 331,505.95 | 18,694.05 | 95% |
| | **சேவைகள்** | | | | |
| 1401 | போக்குவரத்து | 500,000.00 | 488,105.00 | 11,895.00 | 98% |
| 1402 | தபால் மற்றும் தொடர்பாடல் | 1,400,000.00 | 1,324,706.81 | 75,293.19 | 95% |
| 1403 | மின்சாரம் மற்றும் நீர் | 2,900,000.00 | 2,815,720.78 | 84,279.22 | 97% |
| 1404 | வாடகைகளும் உள்நாட்டு வரிகளும் | 320,000.00 | 283,140.81 | 36,859.19 | 88% |
| 1405 | ஏனைய சேவைகள் | 16,400,000.00 | 16,330,848.10 | 69,151.90 | 99% |

| விடயக் குறியீடு | விடய விபரம் | தேறிய ஒதுக்கீடு 2012 ன் வரவு செலவுத் | மொத்தச் செலவு ரூ. | மீதமுள்ள ஒதுக்கீடு | % |
|---|---|---|---|---|---|
| | **மாற்றுகைகள்** | | | | |
| 1506 | ஆதனக் கடன் வட்டி | 980,000.00 | 953,286.98 | 26,713.02 | 97% |
| | மொத்தம் | **174,880,000.00** | **174,316,715.73** | **563,284.27** | **100%** |

# 5

## திணைக்களத்தின் கீழ் இயங்கும் தாவரவியல் பூங்காக்களும் அலகுகளும்

### 5.1. அரச தாவரவியல் பூங்கா, பேராதனை



பேராதனை, அரச தாவரவியல் பூங்காவானது, இலங்கையின் மிக நீண்ட நதியான மகாவலி கங்கையால் சூழப்பட்ட குதிரை லாட வடிவிலான தீப கண்டமொன்றில் அமைந்துள்ளது. இது மத்திய மலை நாட்டின் தலை நகரான கண்டி மாநகரிலிருந்து 6 ½ கி.மீ. தூரத்தில் சுமார் 147 ஏக்கர் நிலப்பரப்பில் (60 ஹெக்டயர்) அமைந்து சுமார் 4500 தாவர வகைகளைக் கொண்டு காணப்படுகின்றது.

மேலும் அது பல வகையினதான அலங்காரத் தாவரங்களுக்கும் இலங்கையின் விஷேட வாசனைத் திரவியங்களை உற்பத்தி செய்யும் பல்வகைச் செடி, கொடிகளுக்குமான இல்லமாகவும் அமைந்துள்ளது. அதன் புல்வெளிகள் நெடுகிலும் செழிப்பாக வளர்ந்த பிரமாண்டமான அயன வலய மரங்கள் காணப்படுகின்றன. இப்பூங்காவின் பிரதான அலங்காரமாக அதன் ஓக்கிட் இல்லம் காணப்படுகிறது. அதில் 300 க்கும் அதிகமான மிக அழகிய, செழிப்புமிக்க ஓக்கிட் வகைகள் காணப்படுகின்றன. அதன் வாசனைத் திரவியத் தோட்டத்தில் பாரம்பரிய ஆயுர்வேத மருந்துகளைத் தயாரிக்கப் பயன்படும் மரங்களும் தாவரங்களும் நிறைந்து காணப்படுகின்றன. இப்பூங்காவின் உயர்ச்சி மிக்க அழகுக்கு மகாவலி கங்கை மேலும் மெருகூட்டுகிறது.


தாவர வளங்களை அறிந்து கொள்ளவும், ரசிக்கவும் இயற்கையானதும் செயற்கையானதுமான சூழல்களில் அவற்றை முகாமை செய்யவுமான சந்தர்ப்பத்தை இவ் அரச தாவரவியல் பூங்கா மக்களுக்கு வழங்குகிறது.

### 5.1.1. 2012 டிசம்பர் 31ம் திகதிய பணியாளர் விபரம்

| பெயர் | பதவி | தகைமை | துறை |
|---|---|---|---|
| கலாநிதி. திருமதி. A.M.A.S. அத்தனாயக | பிரதிப் பணிப்பாளர் | B.Sc. (தாவரவியல்), M.Sc., Ph.D. | தாவர விஞ்ஞானம், தாவர முறையியல் |
| திரு. P. D. S. விஜேரத்ன | பூங்கா பொறுப்பாளர் | B.Sc. | விவசாயம் |
| திரு. P.K. மஹந்தேகம | அதிபர் | B.Sc. | விவசாயம் |
| திரு. A.G. சுனில் | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | B.Sc., M.phill | தாவர விஞ்ஞானம |
| திருமதி. N.A.S.J.செனெவிரத்ன | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | B.Sc. | உயிரியல் |
| திரு. P. R. C. ரத்னாயக | விவசாய ஆலோசகர் | விவசாய டிப்ளோமா | நில வடிவமைப்பு |
| திரு. H. R. S. M. ஹேரத் | விவசாய ஆலோசகர் | விவசாய டிப்ளோமா | நாற்று மேடை முகாமைத்துவம், தாவர உற்பத்தி |
| திரு. S. S. M. சமரகோன் | பூங்கா உதவியாளர் | நில வடிவமைப்பு, பூங்காவியல் பற்றிய ஒரு வருட கற்கை நெறி | மர சிகிச்சை மற்றும் பேணுகை |
| திரு. D. M. S. தனசேகர | பூங்கா உதவியாளர் | நில வடிவமைப்பு, பூங்காவியல் பற்றிய ஒரு வருட கற்கை நெறி | சேவைத் துறைப் பேணுகை |
| திரு. T. R. B. வீரகோன் | பூங்கா உதவியாளர் | நில வடிவமைப்பு, பூங்காவியல் பற்றிய ஒரு வருட கற்கை நெறி | நில வடிவமைப்பு |
| திரு. T. பிரேமசிறி | பூங்கா உதவியாளர் | நில வடிவமைப்பு, பூங்காவியல் பற்றிய ஒரு வருட கற்கை நெறி | ஊழியர் மேற்பார்வை |
| திரு. A. G. திலகரத்ன | பூங்கா உதவியாளர் | நில வடிவமைப்பு, பூங்காவியல் பற்றிய ஒரு வருட கற்கை நெறி | பாதுகாப்பு சேவைகள் மேற்பார்வை |

### 5.1.2. பார்வையாளர்கள்

1,396,271 பேர் (1,149,458 உள்நாட்டவர்களும்246,813 வெளிநாட்டவர்களும்) இவ்வருடம் இப் பூங்காவை தரிசித்தனர். கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது வெளிநாட்டுப்பார்வையாளர்களின் எண்ணிக்கை 9% அதிகரிப்பைக் காட்டுகிறது.




### 5.1.3. வருமானம்

அந்தூரியம், ஓகிட், இலைத்தாவரங்கள் மற்றும் மூலிகைத் தாவரங்கள் 88,857ம் 2662 விதைப் பக்கட்டுகளும் வேறு தாவர உற்பத்திகளும் இவ்வருடம் விற்பனை செய்யப்பட்டன. இவ்வருடத்தில் பெறப்பட்ட ரூபா. 326.2 மில்லியன் வருமானத்தில் ரூபா. 311.8 மில்லியன் பார்வையாளர்கள் மூலமும் ரூபா. 4 மில்லியன் தாவர விற்பனை ரூலமும் ரூபா. 0.3 மில்லியன் பிரசுரங்கள் ரூலமும் ரூபா. 9.6 மில்லியன் வாடகைகள் ரூலமும் ரூபா. 0.3 மில்லியன் படப்பிடிப்பு ரூலமும் பெறப்பட்டது.

### 5.1.4. விஷேட அதிதிகளின் வருகை

பின்ருவோர் அதிதிகளாக இவ்வருடம் வருகை தந்தனர்.

| | அதிதிகள் | திகதி | நாடு |
|---|---|---|---|
| 1. | கென்ட் இளவரசர் அதி கௌரவத்துக்குரிய மைக்கல் மற்றும் இளவரசி | 02.01.2012 | இங்கிலாந்து |
| 2. | பரகுவே மிருகக் காட்சிச் சாலைப் பணிப்பாளர் மேஜர். மிரொஸ்லெவ் போர்பெக், மற்றும் 08 அதிகாரிகள் | 20.01.2012 | செக் குடியரசு |
| 3. | தென் இந்திய இராணுவத் தளபதி லெ.ஃ.ப்டினன்ட் ஜெனரல் ஏ.கே. சிங். | 10.03.2012 | இந்தியா |
| 4. | ஸஓயாங் நகர முதல்வர் திரு. சென் யூஷியூ மற்றும் சீன அதிகாரிகள் | 12.03.2012 | சீனா |
| 5. | வங்காளதேச கைத்தொழில் அமைச்சர் திரு. துலிப் பர்வா | 31.03.2012 | வங்காளதேசம் |
| 6. | தேசிய பாதுகாப்புக் கல்லூரி அதிகாரிகள் 21பேர் | 20.05.2012 | நைஜீரியா |
| 7. | மாண்புமிகு எர்லிண்டா எஃப் பஸிலியோ. வெளிவிவகாரத் திணைக்கள துணைச்செயலாளர் | 25.05.2012 | பிலிப்பைன்ஸ் |

| | அதிதிகள் | திகதி | நாடு |
|---|---|---|---|
| 8. | பேராசிரியர். க்வாக் யங் ஹூன், லும்பினி உலக நகர பெருந்திட்டம் மற்றும் சம்புமல்லா திட்டங்களின் செயற்திட்டப் பணிப்பளர் | 30.05.2012 | தென் கொரியா |
| 9. | பொஸ்டன் நகர மசாசுசெட்ஸ் பலகலைக் கழக உயிரியல் பேராசிரியர் கலாநிதி கமால் பாவா | 17.07.2012 | அமெரிக்கா |
| 10. | ஹாவார்ட் பலகலைக்கழக ஆர்னோல்ட் மரத் தோட்டப் பணிப்பாளரும் வனத் துறை ஆய்வுப் பேராசிரியருமான பீடர் அஷ்டன் | 17.07.2012 | அமெரிக்கா |
| 11. | இலங்கைக்கான தாய்லாந்துத் துதுவர் மாண்புமிகு பீ. வொராசாட். | 01.08.2012 | தாய்லாந்து |
| 12. | பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சர்கள். | 04.09.2012 | - |
| 13. | பொதுநலவாய வியாபார மாநாட்டின் தவிசாளர் கலாநிதி. மஹான் கோல் | 02.10.2012 | இந்தியா |
| 14. | சீன அரச வனத் திணைக்கள அதிகாரிகள் 11 பேர் | 04.10.2012 | சீனா |
| 15. | கத்தோலிக்க ஆயர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள வருகை தந்த ஆயர்கள் 100 பேர் | 06.10.2012 | - |
| 16. | சீன மக்கள் குடியரசின் வியாபார மாநாட்டுத் தலைவர் திரு சாஹோ கீஸாங் | 08.10.2012 | சீனா |
| 17. | ஆசிய விஞ்ஞான சம்மேளன மாநாட்டில் கலந்து கொள்ள வருகை தந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகள் | 10.10.2012 | - |
| 18. | மாலை தீவுகளைச் சேர்ந்த கல்வி அதிகாரிகள் | 04.11.2012 | மாலை தீவுகள் |
| 19. | சீ ஷெல்ஸ் நாட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் | 06.11.2012 | சீ ஷெல்ஸ் |
| 20. | இந்திய லால் பஹதூர் தேசிய கல்வி நிலைய நிர்வாக உத்தியோகத்தர்கள் 14 பேர் | 08.11.2012 | இந்தியா |
| 21. | இலங்கைக்கான அமெரிக்கத் துதுவர் மாண்புமிகு மிஷெல் ஜே. ஸிஸன் | 29.11.2012 | அமெரிக்கா |
| 22. | சார்க் நாடுகளைச் சேர்ந்த விதை தொழில்நுட்பவியலாளர்கள் 30 பேர் | 10.12.2012 | - |
| 23. | மாலை தீவுகளைச் சேர்ந்த கல்வி அதிகாரிகள் 14 பேர் | 12.12.2012 | மாலை தீவுகள் |

## 5.2. தேசிய தாவரக் கயம்

இலங்கையினதும் மற்றும் வெளிநாடுகளதும் தாவரங்களின் உலர்ந்த தாவரவியல் கூட மாதிரிகளை முறையான ஆய்வுகளுக்காக பாதுகாத்து வைக்கும் இடமே தேசிய தாவரவியல் கூடமாகும்.



இங்கு 160,000 க்கும் அதிகமான தாவரவியல்கூட மாதிரிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. அத்தோடு தாவரங்கள் பற்றிய 3500 க்கும் மேற்பட்ட புத்தகங்களும் சஞ்சிகைகளும் இதன் நூலகத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

தாவரக் கண்டுபிடிப்பு, அடையாளம் காணல், மாதிரி தயாரித்தல், ஆவணப்படுத்தல் மற்றும் நாட்டின் தாவரச் செல்வத்தை மீள் பரிசீலித்தல் ஆகிய பணிகளை தேசிய தாவரவியல் கூடம் மேற்கொள்கிறது. உணவு மற்றும் விவசாய தேவைகளுக்கான தாவர வளங்களை கணக்கெடுப்பதன் மூலமும் பதிவு செய்வதன் மூலமும் இந்நிறுவனமானது நாட்டின் தேசிய அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்புச் செய்கிறது.

இந்நிறுவனமானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆய்வாளர்களுக்கு தாவரங்களை வகைப்படுத்துதல் தொடர்பான ஆய்வுப் பணிகளுக்கு வசதி செய்து கொடுப்பதோடு தாவர மற்றும் தாவரப் பொருள்களை ஏற்றிறக்குமதியின் போது எழும் சட்டப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சுங்கத் திணைக்களத்துக்கு உதவுகிறது. அண்மையில் இந்நிறுவனமானது, இலங்கையின் தாவரங்களை சிவப்புப் பட்டியல் இடும் அதிகார சபையாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. தேசிய தாவரவியல் கூடமானது உலகின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த தாவரவியல் ஆய்வு நிறுவனங்களுடன் அறிவையும் தாவர மாதிரிகளையும் பரிமாறிக் கொள்ளும் பணியிலும் ஈடுபட்டுள்ளது.இலங்கையின் தாவரங்களுக்கான தேசிய சிவப்புப் பட்டியலிடல் அதிகார சபை என்ற வகையில் அது தேசிய மற்றும் சர்வதேச சிவப்பு பட்டியலிடல் பணிக்கான பிரதான நிறுவனமாகவும் தொழில்படுகிறது.

### 5.2.1. 2012 டிசம்பர் 31ம் திகதியிலான பணியாளர் விபரம்

| பெயர் | பதவி | தகைமை | துறை |
|---|---|---|---|
| திருமதி. R.A.S.W.ரனசிங்ஹ | பிரதிப் பணிப்பாளர் (பதில்.) | B.Sc.(தாவரவியல்), M.Sc. | தாவர வகைப்படுத்தல், உயர் தாவரமுறையியல் மற்றும் அலகின் முகாமை |
| திருமதி. N.P.T. குணவர்தன | விவசாய மேற்பார்வை உத்தியோகத்தர் | B.Sc.((தாவரவியல்), M. Sc | பாசி இனத் தாவரங்களின் வகைப்படுத்தல் |
| திருமதி. . G. ஃபொன்சேகா | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | B.Sc. (தாவரவியல்), M. Sc | தாவர வகைப்படுத்தல், உயர் தாவரமுறையியல் |

### 5.3. பூச்செடிச் செய்கை ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவு



பூச்செடிச் செய்கைத் துறையோடு தொடர்பான ஆய்வுகளைச் செய்வதும் பயிற்சி நிகழ்ச்சிகள், கள ஆலோசனை சேவைகள், இத்துறையிலான முதலீட்டு வாய்ப்புக்கள் பற்றிய தகவல்களை வழங்குதல் மற்றும் மாவட்ட மட்டத்தில் பூச்செடிச் செய்கையாளர் சங்கங்களை உருவாக்குதல். உபகரணங்களையும் உள்ளீடுகளையும் வழங்குதல் ஆகிய பணிகள் மூலம் பூச்செடிச் செய்கைத் துறையின் அபிவிருத்திக்குப் பங்களிப்பதும் இவ்வலகின் பணியாகும்.

அண்மைக்காலமாக பூச்செடிச் செய்கைத் துறையானது இலங்கையில் பெருத்த அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தரும் தொழிற்துறையாக மாறியுள்ளது. மேலதிக வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்கும் தொழில் வாய்ப்புக்களை வழங்கவும் இத்துறையானது மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியது காலத்தின் கட்டாயத் தேவையாகும். பூச்செடிச் செய்கையில் ஈடுபட்டுள்ளோர் தமது இயலுமைகளைப் புரிந்து கொள்வதற்கும் நிலைபேற்றுத் தன்மை கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் பெரும் இலாபங்களை ஈட்டிக் கொள்வதற்கும் இவ்அலகு உதவுகிறது.

### 5.3. 1. பணியாளர் விபரம்

**பூச்செடிச் செய்கை ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவு**

| | பெயர் | பதவி | தகைமை | துறை |
|---|---|---|---|---|
| 1. | கலாநிதி. ஷெலோமி A. கிருஷ்ணராஜா | பிரதிப் பணிப்பாளர் | B.Sc. (தாவரவியல்), M.Sc., Ph.D. | உயிரியல் தொழில்நுட்பம் மற்றும் அலகின் முகாமை |
| 2. | திரு. A. யோகராஜா | ஆய்வு உதவியாளர் | விவசாய டிப்ளோமா | தாவர நுண் உருவாக்கம் |
| 3. | திருமதி. R. M. கமலா மெனிகே | விவசாய ஆலோசகர் | விவசாய டிப்ளோமா | அந்தூரியம் |
| 4. | திரு. U. B. பலிபானே | விவசாய மேற்பார்வை உத்தியோகத்தர் | B.Sc. | நீர்த் தாவரங்கள் மற்றும் ஜேர்பெரா |
| 5. | திருமதி. K. A. C. N. செனெவிரத்ன | விவசாய மேற்பார்வை உத்தியோகத்தர் | B.Sc., M. Sc | அறுவடைக்குப் பின்னரான நடவடிக்கைகள்,உயிரியல் பசளை |
| 6. | திரு. M. M. K. P. வெலிகும்புர | விவசாய ஆலோசகர் | விவசாய டிப்ளோமா | இலைத் தாவரங்கள் |
| 7. | திருமதி. W. M. D. E. R. அந்த்ராதி | விவசாய ஆலோசகர் | விவசாய டிப்ளோமா | ஓகிட் |
| 8. | திருமதி.. I. H. C. N. சாமந்திகா | விவசாய ஆலோசகர் | விவசாய டிப்ளோமா | வெளிநாட்டில் |
| 9. | கலாநிதி. (திருமதி.) H. M. R. ஹேரத் | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | B.Sc., M. Sc, PhD | தாவர நுண் உருவாக்கம் |
| 10. | Ms. M. K. ரூபசிங்ஹ | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | B.Sc., M. Sc | தாவர வளர்ப்பு |
| 11. | திரு. R. A. S. பெரேரா | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | B.Sc., M. Sc | பூச்செடிச் செய்கை விரிவாக்கம் - கண்டி பிராந்தியம் |

| | பெயர் | பதவி | தகைமை | துறை |
|---|---|---|---|---|
| 12. | திருமதி.A. N. அபேகோன் | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | B.Sc., M. Sc | தாவர நோயியல் |
| 13. | திருமதி. L. A. P. பெரேரா | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | B.Sc., M. Sc | விவசாயவியல், அறுவடைக்குப் பின்னரான நடவடிக்கைகள் |
| 14. | திருமதி. M. உத்பலவர்ணா | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | B.Sc. | பூச்செடிச் செய்கை விரிவாக்கம் - கேகாலை பிராந்தியம் |
| 15. | திருமதி. K. A. S. திலகரத்ன | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | B.Sc. | பூச்செடிச் செய்கை விரிவாக்கம் - கேகாலை பிராந்தியம் |

### 5.4. சுவஹஸ் மல் செவன, நாரஹேன்பிட



தீவின் பல்வேறு பகுதிகளிலும் காணப்படுகின்ற''சுவஹஸ்மல்'' பூ வளர்ப்பாளர் சங்கங்களைச் சார்ந்த பூ வளாப்பாளர்களது உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நோக்கில் இவ் அலகு ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் இது டொரிங்டன் சதுக்கத்தில் இது இயங்கியது. தற்கோது நாரஹேனபிடவில் இயங்குகிறது. வெட்டப்பட்ட பூக்களையும் வேறு பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளையும் காட்சிப்படுத்துவதற்கான குளிரூட்டிகளுடனான காடசியறை வசதிகள் அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன. முதலில் பேராதனை மற்றும் ஹக்கல பூங்காக்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற பூக்களையும் பின்னர் பூ வளர்ப்பவர்களால் உற்பத்தி செய்யப்படும் பூக்களையும் இங்கு விற்பனைக்காக வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| அலுவலர் பெயர் | பதவி | தகைமை | துறை |
|---|---|---|---|
| திருமதி. R.S.W. கோமஸ் | உதவிப் பணிப்பாளர் | B.Sc. | பொறுப்பதிகாரி |
| திரு. காமினி | | விவசாய டிப்ளோமா | தாவர உற்பத்தி |

### 5.5. தாவரவியல் பூங்கா ஹக்கல



இலங்கையில் சிங்கோனா பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்கென 1861 இல் ஹக்கல தாவரவியல் பூங்கா உருவாக்கப்பட்டது. இலங்கையின் நுவரலியா மாவட்டத்தின்தேயிலை தோட்டங்கனுக்கு மத்தியில் அமைந்துள்ள இது இலங்கையின் இரண்டாவது பெரிய தாவரவியல் பூங்காவாகும்.
இத்தாவரவியல் பூங்கா கடல் மட்டத்திலிருந்து 1745 மீட்டர் உயரத்தில் ஹக்கல மலைத்தொடரின் நிழலில் அமைந்துள்ளது. இப்பூங்காவனது நுவரெலியா பதுளை வீதியில் நுவரெலியாவிலிருந்து 9.5 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.


இப் பூங்காவின் தாவரங்கள் உப அயன வலயத்துக்குரியவையாகும். அவற்றில் உள்நாட்டு, மலைத் தாவரங்கள், ஏனைய உப அயன வலய சாடுகளிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட தாவரங்கள் ஆகியன முறைளாக நடப்பட்டுள்ளன.

**5.5.1. 2012 டிசம்பர் 31ம் திகதிய பணியாளர் விபரம்**

| அலுவலர் பெயர் | பதவி | தகைமை | துறை |
|---|---|---|---|
| திரு. M.M.D.J. சேனாரத்ன | பூங்கா பொறுப்பாளர் | B.Sc. (தாவரவியல்), M.Sc. (வனவியல்) | தாவர விஞ்ஞானம் |
| திரு. R.G.S.P. பியசேன | நிகழ்ச்சிததிட்ட உதவியாளர் | B.Sc. | பூச்செடிச் செய்கை |
| திரு. A. B. மத்தேகொட | தோட்ட உதவியாளர் | ஒரு வருட கற்கை நெறி - நில வடிவமைப்பும் பூங்காவியலும | நில வடிவமைப்பும் பூங்காவியலும் |

### 5.5.2. பார்வையாளர்கள்

600,232 பேர் (587,743 உள்நாட்டவர்களும் 12,489 வெளிநாட்டவர்களும்) இவ்வருடம் பூங்காவை தரிசித்தனர். முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது இது 18மூ அதிகரிப்பாகும்(510,116).




### 5.5.3. வருமானம்

73,238 தாவரங்கள் 6,680 விதைப்பெக்கட்டுகள் 33,926 பூக்கள் ஆகியன விற்பனை செய்யப்பட்டன. இவ்வருடத்தில் . ரூபா. 40,112,442.40 பின்வரும் வகைகளில் வருமானமாக பெறப்பட்டது.



நாற்று மேடைகளில் ஜேர்பரா தாவரங்கள்

| வகை | வருமானம் (ரூ) |
|---|---|
| நுழைவுக்கட்டணம் | 35,525,015.00 |
| வாகன நுழைவுக்கட்டணம் | 807,475.00 |
| தாவரம் மற்றும் இதர பொருள் விற்பனை | 3,200,949.90 |
| பிரசுர விற்பனை | 15,890.00 |
| சுற்றுலா விடுதி | 341,547.00 |
| படப்பிடிப்பும் ஏனையவையும் | 221,565.50 |
| **மொத்தம்** | **40,112,442.40** |

### 5.5.4. விஷேட அதிதிகளின் வருகை

பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் மற்றும் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த 15 அதிதிகள் 20.04.2012 அன்று இப்பூங்காவை தரிசித்தனர்.
போரசிரியர் பீட்டர் அஷ்டன் (ஹாவாட் பல்கலைக் கழகம்), போரசிரியர் மார்க் அஷ்டன் (யேல் பல்கலைக்கழகம்), போரசியர் நிமால் குணதிலக (போரதனை பல்கலைக்கழகம்), பேராசிரியர் சாவித்ரி குணதிலக ஆகிஏயார் 21.07.2012 அன்று இப் பூங்காவிலுள்ள புராதன தேயிலை பயிர்களைப் பற்றி ஆய்வு செய்ய வருகைதந்தனர்.

### 5.6. கம்பஹா தாவரவியல் பூங்கா



கம்பஹா, ஹெனரத்கொட தாவரவியல் பூங்கா 1876ல் றப்பர் பயிர்ச்செய்கையை இலங்கையில் ஊக்குவிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டது. இது கம்பஹா நகரத்தில் இருந்து 2 கிலோ மீற்றர் தொலைவில் கம்பஹா மினுவங்கொடை பாதையில் அமைந்துள்ளது. இது 43 ஏக்கர் பரப்பைக் கொண்டது. இப்பூங்காவனது வருடத்துக்கு சுமார் 150,000 க்கும் மேற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு பார்வையாளர்களால் தரிசிக்கப்படுகிறது.

பிரதேசத்தின் உயிரியல் பல்வகைமையை பாதுகாக்கும் பொருட்டான தாவர வெளிவாரிப் பேணுகை, பூச்செடிச் செய்கை மற்றும் நிலவடிவமைப்பு பற்றிய கல்வி மற்றும் நீடிப்பு சேவைகள், தாவரவியல் தகவல் பரத்துகை, அலங்கார தாவரவியலை ஊக்குவிப்பதற்கான பூச்செடிச் செய்கை மற்றும் திசு உருவாக்கம் தொடர்பான ஆய்வுகள், மத மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மரங்களை பாதுகாத்தல், விற்பனைக்கான தாவர உற்பத்தி, மலர் கண்காட்சிகளை ஏற்பாடு செய்தல் போன்றன இப்பூங்காவின் பிரதான பணிகளாகும்.

### 5.6.1. 2012 டிசம்பர் 31ம் திகதிய பணியாளர் விபரம்

**இப்பூங்காவின் பணியாளர்கள்**

| அலுவலர் பெயர் | பதவி | தகைமை | துறை |
|---|---|---|---|
| திருமதி. சநதிரிகா ஐயவீர | பூங்கா பொறுப்பாளர் | B.Sc.(சிறப்பு) விவசாயம்., M.Sc.(தோட்டக்கலை) | தாவர விஞ்ஞானம் |
| திருமதி. J. K. A. தமரா குமாரி | விவசாய ஆலோசகர் | NDT (விவசாயம்) | நாற்றுமேடை முகாமைத்துவம் , தாவர உற்பத்தி |
| திருமதி. M. D. D. S. மகயாகொட | விவசாய ஆலோசகர் | NDT (விவசாயம்) | நில வடிவமைப்பு, மரத்தோட்டவியல் |
| திருமதி. A.A.T. மாலனி | விவசாய ஆலோசகர் | விவசாயத் துறையிலான 1 வருட பிரயோகக் கற்கை | நில வடிவமைப்பு, மரத்தோட்டவியல் |
| செல்வி. S. D. ரம்யகாந்தி | விவசாய ஆலோசகர் | விவசாயத் துறையிலான 1 வருட பிரயோகக் கற்கை | கல்வி மற்றும் பயிற்சி. |
| திருமதி. R.M.T. லக்மாலி | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | BA (சிறப்பு) (ஊடகத்துறை) | முன்னேற்ற மேற்பார்வை |

**பூச்செடிச் செய்கை ஆய் வு மற்றும் விரிவாக்க அலகின் பணியாளர்கள்**


| அலுவலர் பெயர் | பதவி | தகைமை | துறை |
|---|---|---|---|
| திருமதி. M. C. விக்ரமசிங்ஹ | ஆய்வு உத்தியோகத்தர் | B.Sc., M. Sc | பூச்செடிச் செய்கைப் பயிர் விவசாயவியல் |
| திருமதி. அனோமா போவத்த | ஆய்வு உதவியாளர் | விவசாய டிப்ளோமா | தாவர உற்பத்தி |
| திருமதி.M. A. N. ஜயவர்தன | விவசாய ஆலோசகர் | விவசாய டிப்ளோமா | பூச்செடிச் செய்கை விரிவாக்கம் - கம்பஹா மாவட்டம் |
| திரு. D. V. R. A. பெரேரா | விவசாய ஆலோசகர் | விவசாய டிப்ளோமா | பூச்செடிச் செய்கை விரிவாக்கம் - கம்பஹா மாவட்டம் |

| அலுவலர் பெயர் | பதவி | தகைமை | துறை |
|---|---|---|---|
| திருமதி. A. P. சிரிவர்தன | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | B.Sc., M. Sc. | பூச்செடிச் செய்கை விரிவாக்கம் - கம்பஹா மாவட்டம் / அந்தூரியம் பயிரிடலும் நுண் தாவர உருவக்கமும் |
| திருமதி.A. N. நாணயக்கார | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | B.Sc., M.Sc. | பூச்செடிச் செய்கை விரிவாக்கம் - கம்பஹா மாவட்டம் / ஓகிட் பயிரிடலும் நுண் தாவர உருவக்கமும் |
| திருமதி. B.U.G. ரணசிங்ஹ | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | B.Sc. | வெளிநாட்டில் |
| திரு. R. A. M. I. ரத்னாயக | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | B.Sc. | திசு உருவாக்கம், நீர்த் தாவரங்கள் மற்றும் ஜேர்பெரா சேகரிப்பு |
| திரு.S. A. A. U. சுபசிங்ஹ | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | B.Sc., M. Sc | பூச்செடிச் செய்கை விரிவாக்கம் - கம்பஹா மாவட்டம் |
| திருமதி.K. L. K. தர்மதாஸ | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | B.Sc., M. Sc | பூச்செடிச் செய்கை விரிவாக்கம் - கம்பஹா மாவட்டம் |

### 5.6.2. பார்வையாளர்கள்

194,956 பேர் (194,713 உள்நாட்டவர்களும் 243 வெளிநாட்டவர்களும்) இவ்வருடம் இப்பூங்காவை தரிசித்தனர். இது கடந்த வருடத்துடன ஒப்பிடுகையில் 4.6% அதிகரிப்பாகும்..

**பூங்காவுக்கான பார்வையாளர் வருகை**



### 5.6.3. வருமானம்

18,876 தாவரங்களும் ஏனைய பொருட்களும் இவ்வருடம் விற்பனை செய்யப்பட்டது 13,051 மோட்டார் கார்களும் , 13,279 மோட்டார் சைக்கிள்களும் 47 சைக்கிள்களும் பூங்காவிற்குள் நுழைந்தன.

3,988 பேர் பூங்காவில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வள்ளங்களில் பயணம் செய்தனர்..

இவ்வருடத்தில் பின்வரும் வழிகள் மூலம் மொத்த வருமானமாக ரூபா. 14,716,622.00 ஈட்டப்பட்டது.

| வகை | வருமானம் (ரு) |
|---|---|
| பார்வையாளர் | 9,300,940.00 |
| வாகனம் | 3,045,275.00 |
| தாவர மற்றும் ஏனைய பொருள் விற்பனை | 686,905.00 |
| பிரசுர விற்பனை | 15,060.00 |
| நில வாடகை | 685,500.00 |
| படப்பிடிப்பு | 171,040.00 |
| வள்ளம் | 797,600.00 |
| **மொத்தம்** | **14,716,622.00** |



**பார்வையாளர்கள் பூங்காவில் மகிழ்வுறும் காட்சி**

## 5.7. மூலிகைப் பூங்கா, கனேவத்த



இப்பூங்காவானது வடமேல் மாகாணத்தில் குருநாகல் நகரிலிருந்து 15 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. இடைவலயத்தில் அமைந்திருப்பதால் மருந்து மூலிகைப் பயிர்ச்செய்கைக்கு உகந்த தன்மைகளை இது பெற்றிருக்கிறது. 52 ஏக்கர் கொண்ட இப்பூங்காவின் சுமார் அரை வாசியில் தென்னையும் மீதி 22 ஏக்கர்களில் மூலிகைகளும் பயிரிடப்பட்டுள்ளன.

இலகுவில் பெற்றுக் கொள்ள முடியாத, அரிய மூலிகைகளை பேணிப்பாதுகாப்பதும் மருந்து மூலிகைகளை முறையாக வளர்த்துச் சேமிப்பதும் இப்பூங்காவின் நோக்கங்களாகும்.

### 5.7.1. 2012 டிசம்பர் 31ம் திகதிய பணியாளர் விபரம்

### 5.7.2. வருமானம்

12,298 மூலிகைத் தாவரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு அவற்றில் 9,936 விற்பனை செய்யப்பட்டன. அத்தோடு 16,637 தேங்காய்களும் விற்பனை செய்யப்பட்டன. அதன் மூலம் ரூ. 583,552.00 வருமானமாக பெறப்பட்டது.

| அலுவலர் பெயர் | பதவி | தகைமை | துறை |
|---|---|---|---|
| திரு. அபேசிங்ஹ | பொறுப்பதிகாரி | நில வடிவமைப்பு, பூங்காவியல் டிப்ளோமா | *அலகின் முகாமை* |
| திருமதி. E.P.S. இலங்கரத்ன | விவசாய ஆலோசகர் | விவசாய டிப்ளோமா | தாவர உற்பத்தி |

### 5.7.3. பார்வையாளர்கள்

733 பேர் மூலிகைகளைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும் தாவரங்களை கொள்வனவு செய்யவும் என இப் பூங்காவுக்கு வருகை தந்தனர். அவர்களில் அதிகமானோர் ஆயுர்வேத வைத்தியர்களும் மாணவர்களுமாவர்.

## 5. 8. உலர் வலய தாவரவியல் பூங்கா, அம்பாந்தோட்டை

இப்பூங்காவானது 130 வருடங்களுக்குப் பிறகு உள்நாட்டு நிபுணர்களால் வடிவமைக்கப்பட்ட இலங்கையின் முதலாவது பூங்காவாகும். இது தென் மாகாணத்தில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மிரிஜ்ஜவில பகுதியில் அமைந்துள்ளது. இதன் அபிவிருத்திப் பணிகள் 2006 ல் ஆரம்பித்தன.




உலர் வலய காடு வளர்ப்பானது பல்வேறு மனித நடவடிக்கைகள் காரணமாக வேகமாக மறைந்து வருவதை நாம் பார்க்கிறோம். குறிப்பாக கடந்த 30 வருடங்களில் அம்பாந்தோட்டை பிரதேசத்தில் உலர் வலயக் காடு வளர்ப்பானது 98 % வீதத்தால் இழக்கப்பட்டுள்ளது. இப்பூங்காவின் பிரதான நோக்கங்கள் உலர் மற்றும் அதிஉலர் வலய தாவரங்களை குறுகிய மற்றும் நீண்ட காலங்களில் வெளிவாரிப் பேணுகை முறைமையின் கீழ் பேணிப்பாதுகாப்பதும் உலர் வலயத்தின் மிகவும் குறைவாக அறியப்பட்ட மற்றும் குறைவாக பயன்படுத்தப்படும் தாவரங்கள் பற்றிய ஆய்வுகளைச் செய்வதும் மூலிகைக் கைத்தொழிலை ஊக்குவிப்பதும் பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிப்பதும் உலர் வலயத்தில் தாவரவியல் மற்றும் பூச்செடிச் செய்கை கல்வி மற்றும் பயிற்சியை வழங்குவதுமாகும்.

### 5.8.1 2012 டிசம்பர் 31ம் திகதிய பணியாளர் விபரம்

| அலுவலர் பெயர் | பதவி | தகைமை | துறை |
|---|---|---|---|
| திரு. E.M.S. *ஏகநாயக* | பொறுப்பதிகாரி | B.Sc. | *அலகின் முகாமை* |
| திருமதி. மதுரி பீரிஸ் | பூச்செடிச் செய்கை அலகின் தலைவர் | B.Sc. | பூச்செடிச் செய்கை விரிவாக்கம் மற்றும் அபிவிருத்தி |
| திரு. M.G.S. குமார | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | B.Sc. | மரப் பேணுகை, முகாமை மற்றும் மூலிகைத் தாவரங்கள் |

## 5.9. ஈர வலய தாவரவியல் பூங்கா, அவிசாவலை

இப்பூங்காவானது மேல் மாகாணத்தின் அவிசாவலையில் இலுக்ஓவிட்ட பகுதியில் 62 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. அழிவுறும் அச்சத்துக்குட்பட்டுள்ள இப்பிரதேசத்தின் தாவரங்கள் இதன் மூலம் பாதுகாக்கப்படும். அத்தோடு சுற்றுலாத் துறையை மேம்படுத்துவ தற்கும் நாட்டின் பூச்செடிச் செய்கை தொழில் துறையில் வளர்ச்சிக்கும் இது பங்களிப்புச் செய்யும். இப்பூங்காவானது தாவரவியல் மற்றும் சூழலியல் மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் ஓர் ஆய்வு கூடமாக தொழிற்படுகிறது. இப்பூங்காவின் பிரதான நோக்கம் தாழ் நில ஈரவலயத் தாவரங்களை வெளிவாரி பேணுகை முறைமையின் கீழ் பேணிப் பாதுகாப்பதும் ஈரவலய நில வடிவமைப்பை மேம்படுத்துவதுமாகும். மேலும் குடும்பங்களாக வந்து ஓய்வு பெறுவதற்கான பிரதேசமாகவும் பல்வேறு வகைத் தாவரங்களையும் பேணிப் பாதுகாக்கும் பொருளாதார, அழகியல் மற்றும் சூழலியல் பெறுமதி வாய்ந்த தளமாகவும் இது அமையும்.



### 5.9.1. 2012 டிசம்பர் 31ம் திகதிய பணியாளர் விபரம்

| அலுவலர் பெயர் | பதவி | தகைமை | துறை |
|---|---|---|---|
| திரு.. R.D.D. குலரத்ன | பொறுப்பதிகாரி | B.Sc. | *அலகின் முகாமை* |
| திரு.S. S. ஒத்னாபிடிய | விவசாய ஆலோசகர் | விவசாய டிப்ளோமா | நில வடிவமைப்பு, பூங்காவியல் |

6

# மகிந்த சிந்தனை எதிர் கால நோக்கு என்ற தேசிய அபிவிருத்தி கொள்கை வேலைத்திட்டத்தின் கீழ் அயன வலயத்தின் மிகச்சிறந்த தாவரவியல் பூங்காக்களை நோக்கி

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களமானது அரசாங்கத்தின் மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் பல நிகழ்ச்சித்திட்டங்களையும் செயல் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தியது. அவ்வகையில் மேலும் பல தாவரவியல் பூங்காக்களையும் உருவாக்குவதிலும் உயிரியல் சேமிப்பு களங்களை உருவாக்கி அவற்றின் மூலம் வெளிவாரி பாதுகாப்பு முறைமையின் கீழ் இலங்கையின் அனைத்து உயிரியல் கால நிலைகளையும் சேர்ந்த தாவர பல் வகைமையை பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கையை மேற்கொண்டது. வீடுகளில் பூச் செடிச் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு விவசாயிகளுக்கு தேவையான தொழிநுட்பத்தையும் வேறு திறன்களையும் பொருத்தமான ஆய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மூலமும் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிகள் மூலமும் பெற்றுக் கொடுத்தது. அத்தோடு தேசிய மற்றும் சர்வதேச ஊழிய சந்தைக்குத் தேவையான தொழிநுட்ப முன்னேற்றங்களை அறிமுகப்படுத்தி சுற்றாடல் நட்பு சுற்றுலாத் துறையை ஊக்குவிக்கும் வகையில் பூங்காக்களில் பல் வகைமையையும் ஏற்படுத்தியது.

## 6.1 தாவர வெளிவாரிப் பேணுகை

விலங்குகளையும் தாவரங்களையும் மற்றும் சூழல் தொகுதிகளையும் பாதுகாத்தல் பற்றிய பசுமையான இலங்கை என்ற 10 வருட நிகழ்ச்சித் திட்டத்தின் 2வது பணிக்கூற்றின் கீழான வாசகம்:

மேலும் பல தாவரவியல் பூங்காக்களை உருவாக்குவதிலும் உயிரியல் சேமிப்பு களங்களை உருவாக்கி அவற்றின் மூலம் வெளிவாரி பாதுகாப்பு முறைமையின் கீழ் இலங்கையின் அனைத்து உயிரியல் கால நிலைகளையும் சேர்ந்த தாவர பல் வகைமையை பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளல்

அழிவுறும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள இலங்கையின் உள்நாட்டு மற்றும் அறிய தாவரங்களை பாதுகாப்பது மிக முக்கியமாகும். இவ் வகையில் இவற்றை உள்வாரி மற்றும் வெளிவாரி பாதுகாப்பு முறைமைகளின் கீழ் பாதுகாப்பது அவசியம். திணைக்களத்தின் கீழ் இயங்குகின்ற அனைத்து தாவரவியல் பூங்காக்களும் இப்பணிகளை பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் / செயல்திட்டங்கள் மூலம் முன்னெடுக்கின்றன.

## 6.1.1. 6.1.1 புதிய தாவரவியல் பூங்காக்களை உருவாக்குதல்

### 6.1.1.1. மிரிஜ்ஜவில உலர்வலய தாவரவியல் பூங்கா

இதன் அபிவிருத்திப் பணிகள் இவ்வருடம் முனைப்போடு முன்னெடுக்கப்பட்டன. நுழைவாயில் கட்டிடத் தொகுதி, வாகனத் தரிப்பிடம், 3 நிழல் இல்லங்கள் ஆகியவற்றின் நிர்மானப் பணிகள் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நுழைவாயில் கட்டிடத்தொகுதியின் 40% வேலைகளும் வாகனத் தரிப்பிடத்தின் 30% வேலைகளும் நிழல் இல்லங்களின் 50% வேலைகளும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.




நுழைவாயில் நிர்மாணப் பணி



நிழல் இல்ல நிர்மாணப் பணி

குடிநீர் விநியோகப் பணிகளும் ஊழியர் விடுதி நிர்மாணப் பணியும் முன்னெடுக்கப்பட்டுள்ளதோடு உள்ளக வீதிகளை மேம்படுத்தி பூங்காவில் நில அலங்காரத்தை சிறப்புற அமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிரதான பூங்கா அடிப்பாதைகள் புதர் தோட்டம் கள்ளித் தாவரச் சேகரிப்பு ஆகியனவும் அமைக்கப்பட்டுள்ளன.



உள்ளக வீதிகளை மேம்படுத்தல்

### 6.1.1.2. இலுக்ஓவிட ஈர வலய தாவரவியல் பூங்கா

இப்பூங்காவில் அபிவிருத்தி பணிகள் நிறைவை அண்மித்துள்ளன. நில அலங்கார வேலைகள் பூரணப் படுத்தப்பட்டுள்ளன.
பிரதான நுழைவாயில் மற்றும் பார்வையாளர் நிலையம் ஆகியவற்றின் நிர்மானப் பணிகள் அரச பொரியியல் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. உள்ளக வீதிகள் 'இன்டர் லொக்ஸ்' இடப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன.

மூன்று சிறு குளங்கள் அமைக்கப்பட்டதோடு பூங்காவின் பிரதான குளம் விரிவாக்கப்பட்டது. அன்னரிப்பை தடுக்கும் பொருட்டு கால்வாய்கள் அமைக்கப்பட்டதோடு ரோசா தோட்டமொன்றை அமைக்கும் பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



➤ கழிவறை தொகுதிகளை அமைத்தல்



➤ பிரதான நுழைவாயிலில் நுழைவுச்சீட்டு கரும பீடத்தை அமைத்தல

## 6.1.2. வெளிவாரப் பேணுகை மற்றும் உயிரியல் பல்வகைமை பேணுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்6.1.2.1. உயிரியல் சேமிப்பை வளப்படுத்தல்

### அ. தாவர உற்பத்தி

வெளியக மற்றும் உள்ளக தாவரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு பூங்காவில் உயிரியல் சேமிப்பு மேம்படுத்தப்பட்டதோடு விற்பனை செய்யவும் பட்டன.

| பூங்கா | வகை | தொகை |
|---|---|---|
| ஆரச தாவரவியல் பூங்கா | வேளியக தாவரங்கள் | 180,320 |
| ஹக்கல தாவரவியல் பூங்கா | வெளியக மற்றும் உள்ளக தாவரங்கள் | 84,584 |
| கம்பஹா தாவரவியல் பூங்கா | வெளியக, உள்ளக தாவரங்கள் | 44,350 |
| மூலிகை தாவரப் பூங்கா | மூலிகை தாவரங்கள் | 12,298 |
| பூச்செடிச் செய்கை ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவு | ஓகிட், அந்தூரியம், அலைத்தாவரங்கள், ஜேபரா | 77,014 |
| மொத்தம் | | 398,566 |

### ஆ. பூங்காக்களின் மரத்தோட்டத்தில் சேர்க்கப்பட்ட தாவரங்கள்

அரிய மற்றும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள தாவரங்கள் மூலம் மரத்தோட்டங்களின் தாவரச் சேமிப்பை மேம்படுத்தும் பணிகள் இவ்வருடமும் மேற்கொள்ளப்பட்டன. அதன் விபரம் வருமாறு:



பேராதனை,அரச தாவரவியல் பூங்காவின் மரத்தோட்டம்

| **பூங்கா** | **எண்ணிக்கை** |
|---|---|
| அரச தாவரவியல் பூங்கா | 301 |
| ஹக்கல தாவரவியல் பூங்கா | 137 |
| கம்பஹா தாவரவியல் பூங்கா | 35 |
| மூலிகை தாவரப் பூங்கா | 458 |
| மொத்தம் | 931 |

**இ. தாவரச் சிகிச்சைகள்**

மூன்று பிரதான பூங்காக்களில் 181 மரங்கள் இவ்வாறு சிகிச்சைக்குட்படுத்தப்பட்டன. அத்தோடு இத்துப்போன மற்றும் உடைந்த கிளைகளை அகற்றுதல், மரங்களை கயிற்றால் கட்டுதல், இரந்த மரங்களை அகற்றுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.



### ஈ. தாவரவியல் கள ஆய்வு

தாவரவியல் கள ஆய்வானது இவ்வருடம் தேசிய தாவர கயத்தின் மூலம் ஏனைய அலகுகளோடு இணைந்து தாவர மாதிரிகளை பிரதானமாக உலர் மற்றும் ஈர வலயங்களில் அழிவுறும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள தாவரங்களின் மாதிரிகளை கண்டறிந்து சேகரிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டது. இவ்வகையில் 8 கள ஆய்வுப் பயணங்களின் மூலம் 280 பூக்கும் தாவரங்களும் 12 பன்னத் தாவரங்களும் 147 பாசித்தாவரங்களும் சேகரிக்கப்பட்டன.



நக்ல்ஸ் பேணுகை பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஆபத்துக்குட்பட்டுள்ள Gordonia

ஆபத்துக்குட்பட்டுள்ள தாவரங்களை அடையாளப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அதிக ஆபத்துக்குட்பட்டுள்ள ஒரு தாவரமும் ஆபத்துக்குட்பட்டுள்ள 13 தாவரங்களும் ஆபத்தை நெருங்கியுள்ள 11 பூக்கும் தாவர வுகைகளும் அடையாளம் காணப்பட்டன. இவ் ஆய்வு அடுத்த வருடமும் தொடர்ந்து இடம் பெறும்.

**<u>கள ஆய்வுப்பயணங்களின் போது சேகரிக்கப்பட்ட தாவர மாதிரிகள்</u>**

| இடம் | சேகரிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | வித்துமுடியுளிகள் | பன்னத் தாவரங்கள் | பாசித் தாவரங்கள் |
| ஹந்தான | 52 | 1 | 42 |
| லூல் கந்துர | 43 | 3 | 45 |
| கன்னொருவ | 18 | - | - |
| ருஹுனு | 54 | 1 | - |
| யாழ்பாணம் | 28 | - | - |
| அமனவல – அம்பான | 30 | 4 | 25 |
| ரக்ஷாவ | 18 | - | 25 |
| கன்னெளிய | 20 | 3 | - |
| மீன்பிடி வாடி | 17 | - | 10 |
| **மொத்தம்** | **280** | **12** | **147** |

**உ. ஏனைய தாவர கண்டறிதல் நவடிக்கைகள்**

ரிவஸ்டன், லூல் கந்துர, கலே பொக்க மற்றும் மீன்பிடி வாடி ஆகிய பகுதிகளிலான கள ஆய்வுப் பயணத்தின் போது 74 வனப்பூக்களும் 95 பாதையோர மரங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இவைபற்றிய தகவல்கள் ''இலங்கையின் வனப்பூக்கள'', ''இலங்கையின் வீதியோர மரங்கள'' ஆகிய புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் மிகப்பெரிய நீர் மின்சார உற'பத்தித் திட்டமான மொரகஹ கந்த திட்டப்பிரதேசத்தில் தாவரங்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி கண்டறியவும் தொழில்நுட்ப ஆலோசனை வழங்கவும் தாவரங்களின் வெளிவாரி மற்றும் உள்வாரி பேணுகைக்கு ஒத்துழைப்பு வழங்கவும் மேலும் பல தாவர ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் போது 166 தாவரங்களும் 03 பன்னத் தாவரங்களும் சேகரிக்கப்பட்டன.

அரச தாவரவியல் பூங்காவால் 7 கள ஆய்வுப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டு பின்வரும் முடிவுகள் எட்டப்பட்டன.

| **கள ஆய்வுப் பிரதேசம்** | **காலம்** | **சேகரிக்கப்பட்ட தாவர மாதிரிகள்** | | | |
|---|---|---|---|---|---|
| | | | **உள்நாடு** | **ஆபத்துக்குட்பட்டுள்ள** | **ஆபத்துக்குட்படமுடியுமான** |
| ஹன்தான | 2 நாள் | 3 | 11 | 2 | - |
| லூல் கந்துர | 1 நாள் | 8 | 4 | 6 | 4 |
| கன்னொருவ | 1 நாள் | 4 | 5 | 3 | 2 |
| யாழ்ப்பாணம் | 4 நாள் | 2 | 4 | 3 | - |
| பஹல கடுகண்ணாவ | 1 நாள் | 1 | 10 | 1 | - |
| ஹல்கொல்ல | 1 நாள் | 5 | 5 | 5 | 1 |
| மொரகஹ கந்த | 5 நாள் | 97 வகைகள் சேகரிக்கப்பட்டு அடையாளம் காணப்பட்டன. | | | |

கம்பஹா தாவரவியல் பூங்காவால் பிலிகுட்டுவ, அம்பேபுஸ்ஸ, மற்றும் மளிகாதன்ன பிரதேசங்களில் அரிய, எமது நாட்டுக்கேயுரிய தாவரங்களையும் பூங்காஅவில் இல்லாத தாவரங்களையும் சேகரிப்பதற்கென ஆறு களப்பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேற்படி தாவர வகைகளுக்கான வெளிவாரிப் பேணுகை நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.





**தாவரச் சேகரிப்புக்கான களப்பயணங்கள்**

### ஊ. தாவரங்களுக்கு லேபலிடல்



பூங்காக்களின் உயிரியல் சேமிப்பை மேம்படுத்தும் பொருட்டும் தாவரங்கள் பற்றிய அறிவை பார்வையார்களுக்கு வழங்கும் பொருட்டும் இந் நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

பேராதனை அரச தாவரவியல் பூங்காவில் மரங்களுக்கான 1100 லேபல்களும் ஞாபகார்த்த மரங்களுக்கான 71 லேபல்களும் 36 அறிவித்தல் பலகைகளும் பொருத்தப்பட்டன. பழைய அறிவித்தல் பலகைகள் திருத்தியமைக்கப்பட்டன.

கம்பஹா தாவரவியல் பூங்காவில் மும்மொழிகளிலுமான தாவர லேபல்கள் 750 ஐ தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஹக்கல தாவரவியல் பூங்காவில் 401 தாவர லேபல்களும் 10 அறிவித்தல் பலகைகளும் பொருத்தப்பட்டன.

**எ. தாவர தரவுத்தளத்தை மேம்படுத்தல்**

பேராதனை அரச தாவரவியல் பூங்காவில் 15 தேசிய மரங்கள் 12 மரங்கள் 28 வெளிநாட்டு மரங்கள் பற்றிய தகவல்கள் திரட்டப்பட்டு அவற்றின் வாழ்க்கை வட்டம் காலநிலை வேறுபாட்டின் தாக்கம் ஆகியன பதியப்பட்டன.

அத்தோடு பேராதனிய அரச தாவரவியல் பூங்காவிலுள்ள மரங்களுக்கு இலக்கமிடும் முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

மரத்தோட்த்தின் சில பகுதிகளும் பேராதனை தாவரவியல் பூங்காவின் வழிகாட்டல் கையேடும் மீளமைக்கப்பட்டது.

இம் மீளமைப்பின் போது கருங்காலி மரச் சேகரிப்பு, ட பிரிவின் தாவரங்கள் பனை மரச் சேகரிப்பு மற்றும் கிவ் பிரிவின் தாவர சேகரிப்பு ஆகியன மீளமைக்கப்பட்டன.

44 தாவரக் கய மாதிரிகள் அடையாளம் கானப்பட்டன. 9 தாவரக் கய பத்திரங்கள் தயாரிக்கப்பட்டன. பூங்காவின் தற்போதைய தாவரக் கய சேகரிப்பை ஆமம்படுத்தும் பொருட்டு 14 தாவரக்கய மாதிரிகள் சேர்க்கப்பட்டன. 1371 வகைகளக்கும் 56 குடும்பங்களுக்கும் உரிய 2240 மாதிரிகள் மீது தாவரக் கய தொழிநுட்பம் பிரயோகிக்கப்பட்டது.

**6.1.2.2 தாவரக் கயத்தை வளமாக்குதல்**

**அ. தாவர கள ஆய்வுப் பயணங்கள் மூலம் தாவரக் கயத்தை அடையாளப்படுத்தலும் வளப்படுத்தலும்.**

கள ஆய்வு பயணங்கள் மூலம் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டு, வேறுபடுத்தப்பட்டு தேசிய மற்றும் கிளை தாவரக் கயங்களின் சேமிப்புக்களோடு இணைக்கப்பட்டன. அதன் விபரம் வருமாறு:



மொரகஹ கந்த கள ஆய்வு

| சேகரிப்பு வகை | மூலம் | வேறுபடுத்தப்பட்டு சேர்க்கப்பட்டவை | தாவரக் கயம் |
|---|---|---|---|
| **வித்துமூடியுளிகள்** | ஹன்தான | 38 | தேசிய தாவரக் கயம் |
| | லூல் கந்துர | 40 | தேசிய தாவரக் கயம் |
| | கன்னொருவ | 14 | தேசிய தாவரக் கயம் |
| | வேஉட கந்த வன ஒதுக்கு | 53 | தேசிய தாவரக் கயம் |
| | உடதும்பர | 6 | தேசிய தாவரக் கயம் |
| | தொழுகந்த வன ஒதுக்கு | 12 | தேசிய தாவரக் கயம் |
| | சிவனொளிபாத மலை | 11 | தேசிய தாவரக் கயம் |
| **பன்னத் தாவரங்கள்** | லூல் கந்துர | 2 | தேசிய தாவரக் கயம் |
| | ஹக்கல | 64 | தாவரக் கயம் ஹக்கல |
| **பாசித் தாவரங்கள்** | ஹன்தான | 37 | தேசிய தாவரக் கயம் |
| | லூல் கந்துர | 40 | தேசிய தாவரக் கயம் |
| | ஹோட்டன் சமவெளி-2011 | 45 | தேசிய தாவரக் கயம் |
| | கலே பொக்க | 10 | தேசிய தாவரக் கயம் |
| | கன்னொருவ - 2011 | 15 | தேசிய தாவரக் கயம் |
| | கிதுல்கல – 2008.⁚.2012 | 50 | தேசிய தாவரக் கயம் |

**ஆ. தாவரக் கய மாதிரிகளையும் வேறு சேகரிப்புக்களையும் பேணும் நடவடிக்கைகள்.**

இவை தொடர்பிலான பேணுகை நடவடிக்கைகள் பின்வரும் வகையில் இடம்பெற்றன.

| | நடவடிக்கை | மாதிரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பழுதுபார்க்கப்பட்ட தாவரக் கய மாதிரிகள் | 12,367 |
| 2. | பூச்சித்தாக்கத்தாக்கத்துக்காக சிகிச்சையளிக்கப்பட்ட மாதிரிகள் (நஞ்சூட்டல்) | 60 |
| 3. | ஆழ் குளிரூட்டியில் இடப்பட்ட மாதிரிகள் | 9,554 |
| 4. | குவிக்கப்பட்ட மாதிரிகள் | 358 |
| 5. | மீள் குவிக்கப்பட்ட மாதிரிகள் | 5 |
| 6. | உறைகள் இணைக்கப்பட்ட மாதிரிகள் | 874 |
| 7. | இணைக்கப்பட்ட ஜீனஸ் உறைகள் | 709 |
| 8. | சுத்திகரிக்கப்பட்ட மாதிரிகள் | 20,693 |
| 9. | சுத்திகர்க்கப்பட்ட புத்தகங்கள் | 1,121 |
| 10 | அழுத்தப்பட்ட மாதிரிகள் | 403 |
| 11. | தட்டச்சு செய்யப்பட்ட லேபல்கள் | 1,335 |

**இ. இலக்கமிடலும் தாவரக்கய தரவு உருவாக்கமும்**

தாவரக்கய மாதிரிகளுக்கு இலக்கம் வழங்கும் ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. எச். டீ. அல்விஸ் இன் சேகரிப்பான 1137 விவரணங்களையும் திருத்தி டிஜிடல் மயப்படுத்தலும் தேசிய தாவரக் கயத்தில் டிஜிடல் தாவரக் கய அலகொன்றை உருவாக்குவதற்கான தகவல் திரட்டுப் பணியும் ஆரம்பிக்கப்பட்டன. இலங்கையின் தாவரங்கள் பற்றிய கையேடு என்ற நூலின் 15 அத்தியாயங்களின் திருத்தியமைத்தல் பணிகள் நிறைவு செய்யப்பட்டன.

**6.1.2.3 உயிரியல் பல் வகைமை பேணல்**


**அ. தேசிய சிவப்புப் பட்டியலிடும் செயற்திட்டம்.**

சுற்றாடல் அமைச்சின் உயிரியல் பல்வகைமை செயலகத்துடன் இணைந்து தேசிய சிவப்புத் தரவுப் புத்தகத்தை தயாரிப்பதங்கும் உலகலாவிய சிவப்புப் பட்டியலை தயாரிப்பதற்குமான மாதிரிகள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு தேசிய சிவப்புத் தரவுப் புத்தகம் 2012 டிசம்பர் மாதம் 18ம் திகதி கொழும்பு வோடர்ஸ் எட்ஜ் இல் வெளியீட்டு வைக்கப்பட்டது.

மதிப்பீடு செய்யப்பட்ட 3154 மாதிரிகளில் 1385 மாதிரிகள் அச்சுறுத்தலுக்குட்பட்டவை.



இலங்கை தாவரங்களுக்கான சிவப்புப் பட்டியல் வகைகளை தீர்மானிப்பதற்கான நிபுணர்கள் சந்திப்பு






இலங்கையின் தேசிய சிவப்புப் பட்டியல்

**ஆ. ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் (கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்து)**

பல ஆய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**இ. உயிரியல் பல்வகைமை பேணுகை தொடர்பில் நடாத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்**

தாவர கள ஆய்வு அடையாளம் காணல், பெயரிடல், தாவரக்கய முகாமை மற்றும் உயிரியல் பல் வகைமை பேணுகை ஆகியன பற்றி பயிற்சிகளும் கல்வி நிகழ்ச்சிகளும் விரிவுரைகளும் பல்வேறு பிரிவினருக்குமாக நடாத்தப்பட்டன. அது பற்றிய விபரம் வருமாறு:

| நிகழ்ச்சித்திட்டத்தின் தலைப்பு | கலந்து கொண்டோர் | நிறுவனம் | நடாத்தியவர்கள் |
|---|---|---|---|
| உண்ணாட்டு மருத்துவத்திலும் உயிரியல் பல்வகைமையிலும் தாவரக்கயத்தின் பங்கு | 31 மாணவர்கள் | பேராதனைப் பல்கலைக் கழகம் | தேசிய தாவரக்கயம் |
| உண்ணாட்டு மருத்துவத்திலும் உயிரியல் பல்வகைமையிலும் தாவரக்கயத்தின் பங்கு | 90 மாணவர்கள் | விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம் | தேசிய தாவரக்கயம் |
| தாவர முறைமையியல், தாவரக்கய தொழில்நுட்பங்கள் | 100 மாணவர்கள் | உண்ணாட்டு மருத்துவ நிறுவகம், கொழும்புப் பலகலைக் கழகம் | தேசிய தாவரக்கயம் |
| | 123 மாணவர்கள் | திறந்த பல்கலைக் கழகம், நாவல | தேசிய தாவரக்கயம் |
| | 82 மாணவர்கள் | திறந்த பல்கலைக் கழகம், பொல்கொல்ல | தேசிய தாவரக்கயம் |
| | 25 மாணவர்கள் | கொழும்புப் | தேசிய தாவரக்கயம் |

| நிகழ்ச்சித்திட்டத்தின் தலைப்பு | கலந்து கொண்டோர் | நிறுவனம் | நடாத்தியவர்கள் |
|---|---|---|---|
| | | பல்கலைக் கழகம், | |
| | 9 மாணவர்கள் | களனி பல்கலைக் கழகம் | தேசிய தாவரக்கயம் |
| | 25 பயிலுநர்கள் | இயற்கை வனவிலங்குகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம், கிரித்தலே | தேசிய தாவரக்கயம் |
| தாவரங்களின் உயிரியல் பல்வகைமைப் பேணுகை மற்றும் வகைப்படுத்தல் என்பவற்றில் தாவரக்கயத்தின் பங்கு | 25 மாணவர்கள் | பேராதனைப் பல்கலைக் கழகம் | தேசிய தாவரக்கயம் |
| | 33 பயிலுநர்கள் | நிலவடிவமைப்பு, பூச்செடிச் செய்கைக் கற்கைநெறி, அரச தாவரவியல் பூங்கா | தேசிய தாவரக்கயம் |
| தாவர வடிவ அமைப்பியல் பற்றிய விரிவுரை | 78 பயிலுநர்கள் | | தேசிய தாவரக்கயம் |
| தாவரங்களின் உயிரியல் பல்வகைமைப் பேணுகை மற்றும் வகைப்படுத்தல் என்பவற்றில் தாவரக்கயத்தின் பங்கு மற்றும் தாவரக்கய முகாமை பற்றிய களப்பயிற்சி | 30 மாணவர்கள் | சிரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகம் | தேசிய தாவரக்கயம் |
| | 60 மாணவர்கள் | தேசிய கல்விப் பயிற்சிக் கல்லூரி, பொலொன்னறுவ. | தேசிய தாவரக்கயம் |
| | 45 மாணவர்கள் | நிலவடிவமைப்பு, பூச்செடிச் செய்கைக் கற்கைநெறி, அரச தாவரவியல் பூங்கா | தேசிய தாவரக்கயம் |
| | 25 மாணவர்கள் | D. S. சேனாநாயக்க | தேசிய தாவரக்கயம் |

| நிகழ்ச்சித்திட்டத்தின் தலைப்பு | கலந்து கொண்டோர் | நிறுவனம் | நடாத்தியவர்கள் |
|---|---|---|---|
| | | வித்தியாலயம், கண்டி | |
| | 25 அங்கத்தவர்கள் | இளம் விலங்கியலாளர்கள் சங்கம் | தேசிய தாவரக்கயம் |
| தாவர அடையாளம் காணல் | 21 மாணவர்கள் | லக்கல பல்லேகம மத்திய கல்லூரி | அரச தாவரவியல் பூங்கா-பேராதனை |
| | 10 மாணவர்கள் | உயர் தேசிய டிப்ளோமா நைவல தொழில் நுட்பக் கல்லூரி | அரச தாவரவியல் பூங்கா-பேராதனை |
| | 20 டிப்ளோமா மாணவர்கள் | தேசிய வடிவமைப்பு மத்திய நிலையம் - மொரட்டுவ | அரச தாவரவியல் பூங்கா-பேராதனை |
| | 20 மாணவர்கள் | விவசாய பீடம் ருஹுனு பல்கலைக்கழகம் | அரச தாவரவியல் பூங்கா-பேராதனை |
| உயிரியல் பல்வகைமையை நோக்கி தேசிய தாவரவியல் பூங்காக்கள் | 210 புதிதாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட பயிலுநர் அதிகாரிகள் | இலங்கை நிர்வாக சேவை | அரச தாவரவியல் பூங்கா-பேராதனை |
| தாவர அடையாளம் காணல், மரப் பராமரிப்பு, மரத் தோட்டவியல் தொழில் நுட்பங்கள், | 22 மாணவர்கள் | மஹனாம கல்லூரி கண்டி | அரச தாவரவியல் பூங்கா-பேராதனை |
| மரப் பராமரிப்பு | 20 மாணவர்கள் | வனவிலங்குகள் பாதுகாப்பு சான்றிதழ் | அரச தாவரவியல் பூங்கா-பேராதனை |
| உயிரியல் பல்வகைமை | 218 மாணவர்கள் | இயற்கை விஞ்ஞான | அரச தாவரவியல் |

| நிகழ்ச்சித்திட்டத்தின் தலைப்பு | கலந்து கொண்டோர் | நிறுவனம் | நடாத்தியவர்கள் |
|---|---|---|---|
| | | பீடம் திறந்த பல்கலைக் கழகம் | பூங்கா-பேராதனை |
| தாவர மற்றும் உயிரியல் பல்வகைமை பாதுகாப்பு மற்றும் தாவரவியல் பூங்காக்கள் | 321 சிறார்கள் | பிரதேச பாடசாலைகள் | கம்பஹா தாவரவியல் பூங்கா |

**ஈ. உயிரியல் பல்வகைமை பற்றிய செயலமர்வுகள்**

“இலங்கையின் தாழ் நிலப் பாசித்தாவரங்களின் பரிணாமம், உயிரியல் பல்வகைமை மற்றும் பேணுகை” பற்றிய முதலாவது தேசிய செயலமர்வு பேராதனை அரச தாவரவியல் பூங்காவில், அரச மற்றும் தனியார் விஞ்ஞான நிறுவனங்களதும் ஆர்வளர்களதும் பங்களிப்புடன் 2012 ஆகஸ்ட் மாதம் 6ம் திகதி முதல் 11ம் திகதிவரை இடம் பெற்றது. இச் செயலமர்வானது சுற்றாடல் அமைச்சின் உயிரியல் பல்வகைமை செயலகத்துடன் இணைந்து தேசிய தாவரக் கயத்தால்

ஏற்பாடு செய்யப்பட்டது.



தாவரக்கய ஆய்வுகூடத்திலான பிரயோக செயலமர்வு



பரிணாமம், உயிரியல் பல்வகைமை, இலங்கையின் பாசித்தவரங்களின் பேணுகை பற்றிய தேசிய செயலமர்வு

இச் செயலமர்வை சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கலாநிதி பெனீடோ சீ டான், சீன ஸீ ஜியாங்க் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கலாநிதி யே வென், பேராதனை பல்கலைக் கழக ஆகியோர் நடாத்தினர்.

**உ. அறிவூட்டல் பிரசுரங்களைத் தயாரித்தல்**

தாவரக்கய நுட்பங்கள் பூக்கும் மூலிகைகல், படரும் தாவரங்கள், தாழ் நிலத்தாவரங்கள் பற்றிய பிரசுரங்கள் வடிவமைக்கப்பட்டன. இலங்கைக்கே உரிய தாவரங்கள் மற்றும் வெளி நாட்டுக்குரிய தாவரங்கள் பற்றிய பிரசுரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 6.2 . பூச்செடிச் செய்கை அபிவிருத்தி

**மகிந்த சிந்தனை எதிர்கால நோக்கு என்ற 10 வருட அபிவிருத்தி வேலைத் திட்டக் கூற்று**

**"இலங்கையானது அயன வலய பூச்செடிச் செய்கையில் ஒரு தலைமைத்துவ பாத்திரத்தைப் பெற்றுக் கொள்ளத்தக்க வளங்கள் நிறைந்த ஒரு புதையலின் மடியில் இருக்கிறது."**

பூச்செடிச் செய்கை அபிவிருத்திக்காக பல நடவடிக்கைகளையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் இத் திணைக்களம் முன்னெடுத்தது:



*சிரிட்டா மூனி*

#### 6.2.1. ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்கள்

பூச்செடிச் செய்கை ஆய்வு மற்றும் அபிவிருத்தி பிரிவினால் பூச்செடிச் செய்கையுடன் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

##### 6.2.1.1. பரீட்சார்த்தங்களும் ஆய்வுகளும்

**அ. நுண்தாவர உருவாக்கம்**

இலங்கைக்குரிய தாவரமான சிரிடா மூனி மற்றும் வேலி/புதர் மூங்கில் ஆகியவற்றின் நுண்தாவரங்களை உருவாக்குவது தொடர்பான வரைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

**ஆ. விவசாயவியல்**

*Polyscias balfouriana* வெட்டுத் தாவரங்களுக்கான சிறந்த வளர் ஊடகத்தையும், தண்டு நீளத்தையும் அடையாளம் காண்பதற்கான ஆய்வு பேராதனைப் பல்கலைக்கழக தாவரவியல்திணைக்களத்துடன் இணைந்து நடாத்தப்பட்டது. மணல் மற்றும் தும்புத்



***Polyscias balfouriana***



***Ophiopogon chinensis***

துகள் ஆகியவற்றை 1:1 என்ற விகிதத்தில் கலந்து பெறப்படும் ஊடகம் மற்றும் 15 செ.மீ நீளமான தண்டுகள் ஆகியன கூடுதலான வேர் விடுதலுக்கு உகந்தது என கண்டறியப்பட்டது.

**இ. பீடை மற்றும் நோய் முகாமைத்துவம்**

*Polyscias balfouriana* வெட்டுக்களைப்பாதிக்கின்ற அறியப்படாத நோய் ஒன்று அடையாளம் காணப்பட்டு அதனைக் கட்டுப்படுத்துவதற்கான முறைமைகள் ஆய்வு செய்யப்பட்டன. மாணவர் ஆய்வு நிகழ்ச்சித்திட்டங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது பின்வரும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. *Ficus benjamina* தாவரங்களை வெட்டுக்களில் இருந்து உருவாக்குவதற்கான சிறந்த கலவை, மணல் மற்றும் தும்புத் துகள் ஆகியவற்றை 1 : 1 என்ற விகிதத்தில் கலந்து பெறப்படும் ஊடகம் என்றும் வெட்டுக்களின் நீளம் 10” என்றும் கண்டறியப்பட்டது.



*Ficus benjamina*

**ஈ.அறுவடையின் பின்னரான தொழில் நுட்பங்கள்.**

வெட்டப்பட்ட தாமரை (*Nelumbium)* பூக்களின் பூச்சாடி ஆயுள் காலத்தை அதிகரிப்பதற்கான பரிசோதனையும் *Calathea zebrine* தாவரங்களின் பூச்சாடி ஆயுள் காலத்தை அதிகரிப்பதற்கான விலை குறைந்த அமிழ்த்தும் ஊடகத்தைக் கண்டுபிடிப்பதற்கான பரிசோதனையும் சிறந்த பெறுபேறுகளைத் தந்தன.



*Nelumbium (தாமரை)*

### 6.2.1.2. தாவர வளர்ப்பு

உள்நாட்டுத் தாவரங்கள், ஒகிட்கள், அந்தூரியம் போன்றவற்றிலிருந்து நிறம், விளைச்சல், தரம், நோயெதிர்ப்பு சக்தி ஆகியன தொடர்பில் சாதகமான பண்புகளைக் கொண்ட புதிய வகைகளை உருவாக்குவதற்கான பல நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

சேகரிப்பில் உள்ள அனைத்து உள்நாட்டுத் தாவரங்களும் பொதுப் பேணுகை நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டன. *Exacum affine, Chirita spp., Impatiens spp.* ஆகியவற்றிலிருந்து ஆகிய தாவரங்களிலிருந்து கன்று உருவாக்கம் செய்ய்ப்பட்டது.



*Chirita spp.*


### 6.2.2. தேசிய பூச்செடிச் செய்கை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்.

“சுவஹஸ் மல்” நிகழ்ச்சித் திட்டம் என அழைக்கப்படும் இந்நிகழ்ச்சித்திட்டமானது, நாட்டில் பூச்செடிச்செய்கையை அபிவிருத்தி செய்வதனை இலக்காகக் கொண்டு 2005ம் ஆண்டு ஆரம்பிக்கபட்டது. அது இவ்வருடமும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. இத்திட்டத்தின் நோக்கங்களாவன:

1. பூ வளர்ப்பாளர்களை ஓர் ஒழுங்கின் கீழ் கொண்டுவரல்
   **மாவட்ட மட்ட பூ வளர்ப்பாளர் சங்கங்கள்**
2. பூ வளர்ப்பாளர்களை வலுவூட்டல்
3. சந்தைகளுடனான தொடர்பை ஏற்படுத்தி சந்தைப்படுத்தல் வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுத்தல்

| மாவட்டம் | சங்கங்கள் |
|---|---|
| கண்டி | 07 |
| மாத்தளை | 06 |
| கேகாலை | 14 |
| குருநாகல் | 04 |
| கம்பஹா | 27 |
| களுத்தறை | 07 |
| கொழும்பு | 04 |
| இரத்தினபுரி | 04 |
| அம்பாந்தோட்டை | 05 |
| அனுராதபுர | 01 |
| பதுளை | 06 |
| நுவரெலியா | 09 |
| புத்தளம் | 06 |
| மொத்தம் | 100 |

இத்துறையில் முனைப்போடு ஈடுபடும் பூ வளர்ப்பாளர்களை உள்ளடக்கிய விவசாய சங்கங்களை அதிகரிப்பதற்கும் சிறு மற்றும் நடுத்தர பூ வளர்ப்பாளர்களை வலுவூட்டவும் உள்ளீடுகள், உபகரணங்கள் ஆகியவற்றை வழங்குதல், கீழ் கட்டுமான அபிவிருத்தி, சந்தைப்படுத்தல் உதவிகள் போன்ற பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.




**நாடளாவிய சுவஹஸ் மல் சங்கங்கள்**

### 6.2.2.1 6.2.2.1. பூ வளர்ப்பாளர்களை உள்ளடக்கிய சங்கங்களை அதிகரித்தல்

இவ்வருடம் புதிதாக 3 சங்கங்கள் இவ்வகையில் உருவாக்கப்பட்டு மொத்தச் சங்கங்களின் எண்ணிக்கை 100 ஆக ஆக்கப்பட்டது.

### 6.2.2.2. பூ வளர்ப்பாளர்களை வலுவூட்டல்

**அ. பயிற்சி மற்றும் செயலமர்வுகள்**

அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு பல செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

| மாவட்டம் | செயலமர்வுகள் | பங்குபற்றியோர் |
|---|---|---|
| கம்பஹா | 01 | 40 |
| கண்டி | 01 | 61 |
| மாத்தளை | 01 | 65 |
| புத்தளம் | 01 | 50 |
| கேகாலை | 20 | 828 |
| அம்பாந்தோட்டை | 03 | 128 |
| நுவரெலியா | 03 | 65 |
| Total | 30 | 1237 |



**பயிற்சிச் செயலமர்வுகள்**

### ஆ. நாற்று மேடைகளை தரிசித்து ஆலோசனை வழங்குதல்

பின்வரும் அட்டவணை இதனை விபரிக்கிறது.

| மாவட்டம் | நாற்று மேடைகள் |
|---|---|
| கம்பஹா | 450 |
| கண்டி | 42 |
| மாத்தளை | 32 |
| புத்தளம் | 13 |
| கேகாலை | 244 |
| களுத்தறை | 89 |
| அம்பாந்தோட்டை | 01 |
| நுவரெலியா | 189 |
| Total | 1060 |



கம்பஹா, மாத்தளை, கண்டி, கேகாலை, நுவரெலியா,களுத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் கொழும்பு மாவட்டங்களில் பூவளர்ப்பாளர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் குறித்து ஆராய 416 மாதாந்தக் கூட்டங்கள் நடாத்தப்பட்ட்டன.

கம்பஹா மற்றும் கேகாலை மாவட்ங்களில் “சுவஹஸ் மல்” சங்கங்களின் உறுப்பினர்கள், துறை பற்றிய அறிவையும் அனுபவத்தையும் பெறும் பொருட்டு 11 களப்பயணங்களில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

### இ. பூச்செடிச் செய்கை தொடர்பான குறுங்காலப் பயிற்சிகள்

இப்பயிற்சிகள் பின்வருமாறு இடம் பெற்றன.

| விடயம் | காலம் | வகுப்புகளின் எண்ணிக்கை | பங்குபற்றியோர் |
|---|---|---|---|
| ஓக்கிட் வளர்ப்பு | 01 நாள் வகுப்புகள் | 42 | **1,439** |
| | பிரயோக பயிற்சிகள் | 23 | **132** |
| | வெளிக்கள பயணங்கள் | 8 | **533** |
| இலைத் தாவர வளர்ப்பு | 01 நாள் வகுப்புகள் | 42 | **1,460** |
| | பிரயோக பயிற்சிகள் | 24 | **124** |
| | வெளிக்கள பயணங்கள் | 13 | **623** |
| அந்தூரியம் வளர்ப்பு | 01 நாள் வகுப்புகள் | 46 | **1,772** |
| | பிரயோக பயிற்சிகள் | 26 | **86** |
| | வெளிக்கள பயணங்கள் | 9 | **637** |
| ஜேபரா வளர்ப்பு | 01 நாள் வகுப்புகள் | 14 | **346** |
| திசு உருவாக்கம் | 05 நாள் வகுப்புகள் | 10 | **74** |
| **மொத்தம்** | | **257** | **7,226** |

### ஈ. விரிவுரைகளும் ஏனைய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும்

**பூச்செடிச் செய்கை ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவில் பின்வரும் விரிவுரைகள் நடாத்தபட்டன:**

- திசு உருவாக்கம் பற்றி 128 மாணவர்களுக்கு அறிமுக விரிவுரைகள் நடாத்தப்பட்டன.
- கம்பஹா மாவட்ட பூக்கும் தாவரங்கள் மற்றும் வெளி நாட்டு தாவர உற்பத்தியாளர் சங்க உறுப்பினர்களுக்கு, ஏற்றுமதிக்காக பூச்செடிப் பயிர்களை வளர்த்தல் மற்றும் அந்தூரியம் வளர்ப்பு ஆகியன பற்றி விரிவுரைகள் நடாத்தப்பட்டன.



**ஹக்கல பயிற்சி நிகழ்ச்சி**

- மேல் மாகாண விவசாய திணைக்கள அதிகாரிகள் 15 பேருக்கு அலங்காரத் தாவரங்கள், ஓகிட், அந்தூரியம் வளர்ப்பு பற்றி விரிவுரையொன்று நடாத்தப்பட்டது.

- இலைத்தாவரங்கள் மற்றும் பொன்சாய் பற்றி விவசாய திணக்களத்தில் பணியாற்றும் விவசாய ஆலோசகர்களுக்கு 2 பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.
- ஒகிட், அந்தூரியம் மற்றும் இலைத்தாவர வளர்ப்பு பற்றி கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் 28 பேருக்கு தமிழ் மொழி மூலம் விரிவுரையொன்று நடாத்தப்பட்டது.
- பொன்சாய் வளர்ப்பு பற்றி மாஸ் ஹோல்டிங்ஸ் தனியார் நிறுவன அலுவலர்கள் 36 பேருக்கும் கேகாலை மாவட்ட விவசாயத்திணைக்கள அலுவலர்கள் 30 பேருக்கும் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.
- சுய தொழில் என்ற வகையில் அலங்கார தாவர வளர்ப்பை கொள்வதன் நன்மைகள் மற்றும் பூச்செடிச் செய்கைத் துறையில் முதலீடு செய்தல் ஆகியன குறித்தும் விரிவுரையொன்று நடாத்தப்பட்டது.

**பூச்செடிச் செய்கை தொடர்பாக ஹக்கல தாவரவியல் பூங்காவில் நடாத்தப்பட்ட பயிற்சி அமர்வுகள்**

| விபரம் | கலந்து கொண்டோர் | நிறுவனம் |
|---|---|---|
| பூச்செடிச் செய்கை | 43 மாணவர்கள் | தேசிய தொழில் பயிற்சி நிறுவகம் |
| | 46 பூ வளர்ப்போர் | நுவரெலியா, ஊவா |
| பூச்செடிச் செய்கை, நிலவடிவமைப்பு | 30 மாணவர்கள் | பேராதனை பல்கலைக் கழகம் |
| ரோசா, ஜேர்பெரா வளர்ப்பு | | தியத்தலாவ, சுவஹஸ் மல் சங்கம் |
| ஜேர்பெரா வளர்ப்பு, அறுவடையின் பின்னரான தொழில் நுட்பங்கள், ரோசா வளர்ப்பு, பசுமை இல்லத் தொழில் நுட்பம் | 92 பூ வளர்ப்போர் | நுவரெலியா மாவட்டம் |
| ஜேர்பெரா வளர்ப்பு, அறுவடையின் பின்னரான தொழில் நுட்பங்கள், ரோசா வளர்ப்பு, கார்னேஷன் வளர்ப்பு | 83 பூ வளர்ப்போர் | நுவரெலியா மாவட்டம் |
| ரோசா வளர்ப்பு | 16 பூ வளர்ப்போர் | கெப்பிடிபொல, தம்பவின்ன |

| | | |
|---|---|---|
| | | பிரதேசங்கள் |
| | 16 மாணவர்கள் | நவயாலதன்ன விவசாயப் பயிற்சி நிறுவனம் |
| வெட்டுப் பூத் தொழில் | 15 மாணவர்கள் | ருஹுணு பலகலைக் கழகம் |
| வெட்டுப் பூக்களும் கிரிசாந்திமம் வளர்ப்பும் | 15 பயிலுனர்கள் | விவசாய பிரதிப் பணிப்பளர் அலுவலகம், நுவரெலியா |
| ஜேர்பெரா, ரோசா, கிரிசாந்திமம் வளர்ப்பு | 80 தனி நபர்கள் | சிறு தாவர முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் |
| சாடியிலிடப்பட்ட தாவர உற்பத்தி | 26 பூ வளர்ப்போர் | கெப்பிடிபொல சுவஹஸ் மல் சங்கம் |
| ஜேர்பெரா, ரோசா, கார்னெஷன், கிரிசாந்திம்ம், க்லாடியோலா வளர்ப்பு மற்றும் பசுமை இல்லம் | 78 பூ வளர்ப்போர் | நுவரெலியா மாவட்டம் |
| ரோசா, அலங்காரத் தாவரங்கள்வளர்ப்பு மற்றும் நில வடிவமைப்பு | 43 டிப்ளோமா மாணவர்கள் | பெல்வெஹெர விவசாய்ப் பாடசாலை |
| ரோசா, ஜேர்பெரா, கார்னேஷன் வளர்ப்பு | 05 விமானப் படை அதிகாரிகள் | தியத்தலாவ |

**பூச்செடிச் செய்கை தொடர்பாக கம்பஹா தாவரவியல் பூங்காவில் நடாத்தப்பட்ட பயிற்சி அமர்வுகள்**

ஜோர்பெரா, அந்தூரியம், ஒகிட், இலைத் தாவரங்கள் மற்றும் ரோசா வளர்ப்பு பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகள் முறையே 59, 211, 290, 207, 25 நபர்களுக்காக நடாத்தப்பட்டன.

இலைத் தாவரங்கள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சியொன்று ஜா எல பிரதேச செயலாளர் அலுவலக உத்தியோகத்தர்கள் 83 பேருக்காக நடாத்தப்பட்டது.

பாதுகாக்கப்பட்ட கட்டமைப்புக்களின் கீழும் ஹைட்ரோஃபீனிக் முறையிலும் பூச்செடி வளர்த்தல் பற்றிய செயலமர்வொன்று 55 மாணவர்களுக்காகவும் 08 ஆசிரியர்களுக்காகவும் நடாத்தப்பட்டது.

**உ. பிரசுரங்கள்**

இலவச விநியோகத்திற்காக 04 செய்தி மடல்களின் தலா 4000 பிரதிகளும் விற்பனைக்கென 11 வித்தியாசமான தலைப்புக்களிலான கையேடுகளின் தலா 1000 பிரதிகளும் அச்சிடப்பட்டன.



"தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் பூச்செடிச் செய்கை ஆய்வுமற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்" என்ற கையேடு அச்சிட்டு வெளியிடப்பட்டது.

அந்தூரியம், ஒகிட் மற்றும் டேலியா வளர்ப்புப் பற்றிய புத்தகங்கள் திருத்தியமைக்கப்பட்டு அந்தூரியம் வளர்ப்பு பற்றிய புத்தகத்தின் 1000 பிரதிகளும் மற்றைய புத்தகங்களின் 1500 பிரதிகளும் அச்சிடப்பட்டுள்ளன.

25 வகை அலங்காரத் தாவரங்கள் மற்றும் வெட்டுப்பூகள் வளர்ப்பு பற்றிய புதியதொரு புத்தகம் 1000 பிரதிகள் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன.

ஊ. பொருட்கள், உபகரணங்கள் மற்றும் கீழ் கட்டுமான வசதிகள்

கீழ் கட்டுமான வசதிகள், உயர் தர தாவரங்கள்,மற்றும் வேறு பயிரிடல் பொருட்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.



**நிழல் வலை விநியோகம்**

300 க்கு மேற்பட்ட நிழல் வலைகள் கண்டி, மாத்தளை, கொழும்பு, களுத்துறை, புத்தளம், கம்பஹா, குருநாகல், மற்றும் அம்பாந்தோட்டை மாவட்ட பூ வளர்ப்பாளர்களுக்கு வழங்கப்பட்டன

பதுளை நுவரெலியா மாவட்டங்களைச் சேர்ந்த பூ வளர்ப்பாளர் சங்கங்களுக்கு அல்ற்றா வயலெட் பொலிதீன் 60 சுருள்கள் வழங்கப்பட்டன.



***Dracaena sanderiana* வளர்ப்பு**

திவிநெகும திட்டத்தின் கீழ் 3 கட்டங்களாக பொருட்கள் வழங்கப்பட்டன. அவற்றின் ஆவணப்படுத்தல் பணிகளும் நிறைவு பெற்றுள்ளன. இவ்வகையில் Dracaena Sanderiana தாவர வளர்ப்புக்காக 143 ஏக்கர்கள் நிழல் வலைகளின் கீழ் கொண்டு வரப்பட்டன.

169 வளர்ப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட பொருட்களின் பெறுமதி ரூபா 76,111,604.00 ஆகும்.

### 6.2.2.3 சந்தைப்படுத்தல் உதவி

சிற்றளவு மற்றும் மாவட்ட மட்ட கண்காட்சிகள் இதற்காக ஒழுங்கு செய்யப்பட்டன.

| மாவட்டம் | சிற்றளவு கண்காட்சிகள் | மாவட்ட மட்ட கண்காட்சிகள் |
|---|---|---|
| **கம்பஹா** | **33** | **02** |
| **கண்டி** | 15 | **01** |
| **மாத்தளை** | 01 | **01** |
| **கேகாலை** | 37 | - |
| **அம்பாந்தோட்டை** | 05 | **01** |
| **புத்தளம்** | 02 | **01** |
| **பதுளை** | 01 | - |
| **களுத்துறை** | 04 | **03** |
| **கொழும்பு** | 05 | - |
| **குருநாகல்** | 04 | **01** |
| **இரத்தினபுரி** | 02 | |
| **மொத்தம்** | **109** | **10** |



**கண்காட்சிகளும் தாவர விற்பனையும்**

### 6.2.3. பூச் செடிச் செய்கை அபிவிருத்தி நடவடிக்கைகள்



பூச் செடிச் செய்கை ஆய்வு மற்றும் அபிவிருத்தி அலகின் துணையோடு பின்வரும் நடவடிக்கைகள் கம்பஹா தாவரவியல் பூங்காவில் மேற்கொள்ளப்பட்டன.

- அந்தூரியம் மற்றும் ஒக்கிட்களுக்கான திசு உருவாக்க தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. பன்னத் தாவரங்கள், ஜேர்பரா, நீர்த் தாவரங்களுக்கான பொதுப் பேணுகை மேற்கொள்ளப்பட்டன. 736 பூச்சாடிகள் உற்பத்தி செய்யப்பட்டன. அவற்றில் 525 விற்கப்பட்டன.

- 4600 அந்தூரியம் செடிகளும் 2425 சதுர மீற்றர் நைலோன் வலைகளும் 115 வளர்ப்பாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டன. அந்தூரியம் மற்றும் அலங்காரத் தாவர வளர்ப்ஜ சுய தொழிலாகக் கொண்டுள்ள 168 பெண்களுக்கு பயிற்சி நிகழ்ச்சி ஒன்றும் நடாத்தப்பட்டது. லிய அபிமன் திவிநெகும ஆகிய திட்டங்களின் கீழ் இவை நடாத்தப்பட்டன
- அதிகாரிகள் மீரிகம வான் படை நிலையத்தை தரிசித்து ஒக்கிட் வளர்ப்பு பற்றிய அறிவுறுத்தல்களை வழங்கினர் அலகுக்கு விஜயம் செய்த 20 நபர்களுக்கு பூச்செடிச் செய்கைகள் துறையிலான முதலீடுகள் பற்றி அறிவூட்டப்பட்டது.



- அந்தூரியம், ஒக்கிட், இலைத் தாவரங்கள், போன்றவற்றின் வளர்ப்புக்கான நிழல் இல்லங்களின் பராமரிப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. 1221 கள்ளித் தாவரங்களை கொண்ட கள்ளித் தாவர சேமிப்பு நடவடிக்கை பேராதனை அரச தாவரவியல் பூங்காவிலிருந்து மிரிஜ்ஜவில உலர் வலய தாவரவியல் பூங்காவுக்கு மாற்றப்பட்டது.
- சென்ற வருடம் தாய்லாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒக்கிட்கள் பூக்கும் நிலையை அடைந்துள்ளன.




**அம்பாந்தோட்டை பயிற்சி நிகழ்ச்சி**



பேராதனை இலைத்தாவர நாற்று மேடையின் கள அலுவலகம்

- ஈரவலய தாவரவியல் பூங்காவில் பூச்செடிச் செய்கை அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு பூங்காவின் உயிரிச் சேமிப்பு மேம்படுத்தப்பட்டது. Dracaena Sanderiana , அந்தூரியம், ஓக்கிட் தாவரங்கள் பயிரிடப்பட்டு தாவர நடுகைத் திட்டம் நிறைவுபடுத்தப்பட்டது. Dracaena Sanderiana தாவரங்கள் சுமார் 1000 வெட்டுத் தாவரங்கள் வளர்ப்பாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.
- தாய்லாந்திலிருந்து 350 ஓக்கிட் தாவரங்கள் இறக்குமதி செய்யப்பட்டன.
- ஓக்கிட் நாற்று மேடையில் இயற்கை ஓக்கிட் சேகரிப்புக்கு சுமார் 350 வன ஓக்கிட்கள் இணைக்கப்பட்டன. இத்தாவரங்கள் ஒரு வழக்கின் படி தாவரவியல் பூங்காவுக்கு கையளிக்கப்பட்டவையாகும்.

- ஓக்கிட் பிரிவின் அனைத்துப் பூக்களையும் பாதிக்கக் கூடிய ஒரு நோய் கண்டுபிடிக்கப்பட்டது. அதனை கட்டுப்படுத்துவதற்கான முறைமைகள் பற்றிய ஆய்வு தொடர்கிறது.

### 6.2.4 பூச்செடிச் செய்கை பிரிவுகளை மேம்படுத்தல்



உலர் வலய தாவரவியல் பூங்காவில் 2 நிழல் இல்லங்களும் பூச்செடிச் செய்கை விரிவாக்க அலுவலகமும் நிர்மாணிக்கப்பட்டன.

தொழிலாளர் அறைகள், களஞ்சிய சாலைகள் மற்றும் கள அலுவலகங்களை உள்ளடக்கிய கட்டிட நிர்மாணப் பணி கம்பஹா தாவரவியல் பூங்காவில் ஆரம்பிக்கப்பட்டது.

## 6.3. கல்வி மற்றும் பயிற்சி

**மஹிந்த சிந்தனை : எதிர்காலத்துக்கான நோக்கு – 10 வருட அபிவிருத்தி வேலைத்திட்டம் - தொழில் நுட்ப மற்றும் தொழில் கல்வியின் கீழான எண்ணக்கரு**

**கூற்று : வாழ்க்கைக்கான தேர்ச்சிகள் - தேர்ச்சிகளுக்கான தொழில்கள் - தேசியரிதியாகவும் சர்வதேச ரீதியாகவும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிகளை வழங்கி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற் சந்தைக்குத் தேவையான தொழில்நுட்பவியாளர்களை உருவாக்கல்.**

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் இளைஞர் யுவதிகளுக்கும் பூச்செடிச் செய்கையில் ஈடுபட்டுள்ள ஆர்வலர்களுக்குமான ஒரு வருட தேசிய டிப்ளோமா கற்கையையும் 2 வருட உயர் தேசிய டிப்ளோமா கற்கையையும் நில வடிவமைப்புத் தாவரவியல் பயிற்சியையும் வழங்குகின்றது.

குறுங்கால (ஒரு நாள் இரு நாள்) பயிற்சி அமர்வுகள், மூன்று மாத சான்றிதழ் கற்கை என்பவற்றையும் அது வழங்குகிறது.

2012 ல் திணைக்களத்தின் கல்வி மற்றும் பயிற்சி நிலையம் 4000 க்கும் மேற்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தது.

## 6.4 பூங்காக்களின் வசதிகளை மேம்படுத்தி சுற்றுலாத் துறையை ஊக்குவித்தல்

மஹிந்த சிந்தனை : எதிர்காலத்துக்கான நோக்கு – 10 வருட அபிவிருத்தி வேலைத்திட்டம் - **கூற்று : சூழல் நட்பு சுற்றுலாத் துறை, நாட்டின் சூழலியல் பெறுமானங்கள் மற்றும் இயற்கை அமைப்பு சுற்றுலாத் துறை இயலுமை என்பவற்றுக்கு விஷேட கவனம் செலுத்தி சுற்றுலாத் துறை உற்பத்திகள் பன்மைப்படுத்தப்படும்.**

இவ்வருடத்தில் தாவரவியல் பூங்காக்களின் பேணுகை மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்திப் பணிகள் திட்டமிட்டபடி முன்னெடுக்கப்பட்டு பூங்காக்களின் தரமும் அழகும் பேணப்பட்டன.

பின்வரும் நடவடிக்கைகள் இவ்வகையில் முன்னெடுக்கப்பட்டன.

### *6.4.1. அரச தாவரவியல் பூங்காவின் அபிவிருத்தி நடவடிக்கைகள்*

உள்ளக வீதி வடிவமைப்பு மேம்படுத்தப்பட்டு புதிய நுழைவுச் சீட்டுக் கரும பீடமும், நினைவுச் சின்ன விற்பனை நிலையமும் அமைக்கப்பட்டன.



- **டீ.டி. ஏக்கநாயக்க விரிவுரை மண்டபம் புதுப்பிக்கப்பட்டது.**
- **இலங்கை குளத்துக்கு அண்மையிலான நிழல் இல்லம் புதுப்பிக்கப்பட்டது.**
- **புதிய நுழைவுச்சீட்டு கரும பீடம் மற்றும் நினைவுச் சின்ன விற்பனை நிலையம்**







நிழல் இல்ல நிர்மாணம், நீர்ப்பாசன முறைமை, வடிகால்கள் என்பன அமைக்கப்பட்டன.

புதிய இயந்திரங்கள், உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

தனியார் பாதுகாப்பு முறைமை ஏற்படுத்தப்பட்டது.

### 6.4.2. ஹக்கல தாவரவியல் பூங்காவின் அபிவிருத்திப் பணிகள்



புதிய பாறைத் தோட்டம்

பிரதான பாதைக்கு காபட் இடல், சில பகுதிகளுக்கு கொங்கிரீட் பாதைகளை மேம்படுத்தல், பொலி டனல்களை மேம்படுத்தல் ஆகிய பணிகள் முன்னெடுக்கப்பட்டன.






பூங்காவின் எல்லை வேலி புதுப்பிக்கப்பட்டது. நிழல் இல்லங்கள், அலுவலகக் கட்டிடம், குளங்கள், கழிவறைகள் ஆகியவற்றின் புணர்நிர்மானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

நுவரெலியா பருவ காலத்தின் போது இப்பூங்கா மிக அழகாகக் காட்சியளித்தது.

### 6.4.3. கம்பஹா தாவரவியல் பூங்காவின் அபிவிருந்ததிப் பணிகள்

உள்ளக வீதி வலையமைப்பு மேம்படுத்தப்பட்டு புதிய விளையாட்டு உபகரணங்கள் சேர்க்கப்பட்டன. விடுதியின் வடிகால் தொகுதி புதுப்பிக்கப்பட்டது. புதிய வாகனத் தரிப்பிட நிர்மாணம், கால்வாய் புணரமைப்பு வேலைகள் பூரணப்படுத்தப்பட்டன. நீர்ப்பம்பி இல்லம் புதுப்பிக்கப்பட்டது. வேறு அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. புதிய இயந்திரங்கள், உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.



**புதுப்பிக்கப்பட்ட மர இல்லம்**

### 6.4.4 தேசிய தாவரக்கயத்துக்கான பொதுப் பேணுகை, புதுப்பித்தல்கள் மற்றும் கொள்வனவுகள்

ஆய்வு கூட இரசாயணங்கள் மற்றும் மாதிரிகளை பாதுகாத்து வைப்பதற்கான குளிரூட்டி கொள்வனவு செய்யப்பட்டது. பாரம்பரிய தாவர சேமிப்புக்கள் வைக்கப்பட்டுள்ள கட்டிடத்தின் கூரை புணரமைக்கப்பட்டு கழிவறைகளும் புதுப்பிக்கப்பட்டன.

### 6.4.5. கனேவத்த மூலிகைப் பூங்காவின் அபிவிருத்திப் பணிகள்

நில மேம்படுத்தல், பாதை அபிவிருத்தி ,கட்டிட நிர்மாணம் என்பன மேற்கொள்ளப்பட்டன. பிரதான வீதியும் உள்ளக வீதிகளும் மேம்படுத்தப்பட்டன.

பூங்காவின் பெறுமதிமிக்க மரங்களை பாதுகாப்பதற்காக வேலி அமைக்கும் பணியில் மூன்றாம் கட்டம் முழுமைப்படுத்தப்பட்டது.

தாவர இல்லத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணி முழுமை அடைந்துள்ளது.

புதிதாக 458 தாவரங்கள் இப்பூங்காவில் சேர்க்கப்பட்டன.



**தாவர இல்லத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணி**

# 7 விஷேட நிகழ்வுகள்

## 7.1. சர்வதேச மாநாடு

2012 ஜூலை 16, 17ம் திகதிகளில் வன மீள் உருவாக்கம் பற்றிய சர்வதேசக் கருத்தரங்கு நடாத்தப்பட்டது. “தென் ஆசியாவின் ஈரவலய பசுமைப் பிராந்தியத்தில் மனிதர்கள் வாழும் நில அமைப்பிடங்களில் காடுகளை மீள் உருவாக்கம் செய்தல்” என்ற தலைப்பிலான இக்கருத்தரங்கானது, “சூழலியல் தலைமைத்துவம் மற்றும் பயிற்சி முன்னெடுப்பு” (ELTI) என்ற நிறுவனத்தால் வன மற்றும் சூழலியல் ஆய்வுகளுக்கான யேல் பங்கலைக்கழகக் கல்லூரியுடனும் ஸ்மித்ஸோனியன் வெப்ப வலய ஆய்வு நிறுவனத்துடனும் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது. (http://environment.yale.edu/elti/).



வன மீள் உருவாக்கம் பற்றிய சர்வதேசக் கருத்தரங்கின் போதான கலந்துரையாடல் அமர்வு

தென் ஆசியாவுக்கான வன மீள் உருவாக்கம் பற்றிய பிந்திய ஆய்வுகள் பற்றிக் கலந்துரையாடுவதற்காக இக் கருத்தரங்கில் உலகின் பல பாகங்களிலிருந்தும் முக்கிய பேராசிரியர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் 20 பேர் கலந்துகொண்டு முன்வைப்புக்களைச் சமர்ப்பித்தனர்.




**அனுராதபுர “ தயட்ட கிருல ” கண்காட்சி**

64வது சுதந்திர தினத்திற்குச் சமாந்தரமாக 2012. 02. 04ம் திகதி முதல் 12ம் திகதிவரை அனுராதபுரத்தில் இடம்பெற்ற “தயட்ட கிருல” கண்காட்சி பூமியமைப்புக்கான நிபுணத்துவ ஆலோசனைகளை இத்திணைக்களத்தின் அதிகாரிகள் வழங்கினர். மேலும் தாவரங்களும் தாவர உற்பத்திகளும் அடங்கிய விற்பனைக் கூடம் ஒன்றும் அங்கு ஏற்படுத்தப்பட்டு பொதுமக்களுக்கு தாவரவியல் பூங்கா பற்றிய தகவல்கள் முன்வைக்கப்பட்டன.

## 7.2. பூச் செடிச் செய்கை ஆய்வு பற்றிய தேசிய ஆய்வரங்கு (NaSFloR)

2012ம் ஆண்டுக்கான (NaSFloR) பூச் செடிச் செய்கை ஆய்வு பற்றிய தேசிய ஆய்வரங்கு விவசாய கொள்கை ஆய்வுகளுக்கான சபையுடன் (CARP) இணைந்து டிசம்பர்ம் 17ம் திகதி நடாத்தப்பட்டது. இவ் ஆய்வரங்கில் 2010, 2011ம் ஆண்டுகளின் ஆய்வரங்குகளின் நடவடிக்கைகள் பற்றிய அறிக்கைகள் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டன.

இங்கு, பல்வேறு திணைக்களங்களையும் தனியார் துறை நிறுவனங்களையும் சார்ந்த அலுவலர்களாலும் பல்கலைக் கழக மாணவர்களாலும் 16 முக்கிய தலைப்புக்களிலான ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.



## 7.3. ஏனைய செயற்பாடுகள்

அதி மேதகு ஜனாதிபதி அவர்களின் பிறந்த தினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட “தயட்ட செவன” மர நடுகைத் திட்டத்தின் கீழ் 2012 நவம்பர் மாதம் 15ம் திகதி பேராதனை அரச தாவரவியல் பூங்காவின் ஆற்றோரமாக *Dendrocalamus hookeri* தாவரங்கள் 100, நடப்பட்டன.



தயட்ட செவன மர நடுகைத் திட்டம்

வெள்ளை மற்றும் இளஞ்சிவப்பு நிற தாமரைப் பூக்கள் இலங்கைக் குளத்தில் நடப்பட்டன. ஒக்கிட் இல்லத்துக்கருகில் உள்ள குளத்தில் குமுது தாவரங்கள் நடப்பட்டன.

கண்ணொருவ தேசிய விவசாயக் கண்காட்சியில் எமது அதிகாரிகள் கலந்து கொண்டு பூச்செடிச் செய்கை பற்றிய தகவல்களை அவை தேவைப்பட்ட வளர்ப்பாளர்களுக்கு வழங்கினர். திணைக்களத்தின் காட்சிக்கூடம் ஒன்றும் அங்கு திறக்கப்பட்டது.

லபுதுவ விவசாஅயத் திணைக்களத்தின் சேவைக்காலப் பயிற்சி நிலையத்திலும் பண்ணையிலும் இடம்பெற்ற "தக்ஷின நவோதய" கண்காட்சியில் கம்பஹா தாவரவியல் பூங்காவின் பூச்செடிச் செய்கைப் பிரிவைச் சார்ந்த அதிகாரிகள் கண்காட்சிக் கூடம் ஒன்றை நிறுவி பூச்செடிச் செய்கை பற்றிய தகவல்களை வழங்கினர்.

நுவரெலியா வசந்த காலக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக இடம்பெற்ற பூக்கள் கண்காட்சியில் எமது அதிகாரிகள் நடுவர்களாகப் பணியாற்றினர்.

# திணைக்களத்தால் வழங்கப்படும் ஆலோசனை சேவைகள்

8

## 8.1. நில வடிவமைப்புப் பூங்காவியல்

பின்வரும் நிறுவனங்களுக்கு நில வடிவமைப்புப் பூங்காவியல் பற்றிய ஆலோசனை சேவைகள் வழங்கப்பட்டன.

- உதவி இந்திய உயர் ஸ்தானிகர் வாசஸ்தலம், கண்டி
- அரச அதிபர் அலுவலகம், அனுராதபுரம்
- சுற்றுலா விடுதி, பாசிக்குடா
- சிறைச்சாலை, பல்லேகல
- ஹரித பியஸ பயிற்சி நிலையம் ,மீகல்லாவ
- நிர்வாக மற்றும் அபிவிருத்தி பயிற்சி நிறுவனம், பிலிமதலாவ

அரச தாவரவியல் பூங்கா அதிகாரிகள், அம்பாந்தோட்டை தாவரவியல் பூங்காவின் அபிவிருத்திக்கு தமது நிபுணத்துவ அறிவை வழங்கி அதன் நிலவடிவமைப்பை மேம்படுத்தினர்.
எமது அதிகாரிகள் “சுந்தர கம்பஹா” நிகழ்ச்சித் திட்டத்துக்கு தமது ஆலோசனைகளை வழங்கி கம்பஹா நகரை அழகுபடுத்தும் பணிக்கும் பங்களிப்புச் செய்தனர்.

ஹெனரத் கொட புகையிரத நிலைய புனர் நிர்மாணம், பில்லிக்கட்டுவ புனித பூமி அபிவிருத்தித் திட்டம், கம்பஹா வைத்தியசாலை நில அபிவிருத்தித் திட்டம், த்துகம் ஓயா திட்டம் ஆகியவற்றுக்கும் எமது அதிகாரிகள் பங்களிப்பு வழங்கினர்.

மினுவாங்கொட, மாகாணக் கல்வி அலுவலகம், கடுநாயக்க பொறியியல் தொழில் நுட்ப நிறுவனம், முதுங்கொட, கெப்பிடிபொல மஹா வித்தியாலயம், கம்பஹா, யஷோதரா தேவி மகளிர் கல்லூரி மற்றும் கடவத்தை மாஜிஸ்திரேட் நிதி மன்றம் ஆகியவற்றின் நில வடிவமைப்புப் பணிகளுக்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

## 8.2. பூச்செடிச் செய்கை

வர்த்தகப் பூச் செடிச் செய்கை, நாற்று மேடை முகாமைத்துவம், பீடை மற்றும் நோய்க் கட்டுப்பாடு என்பன பற்றிய இலவச ஆலோசனைகள் 896 தனி நபர்களுக்கு வழங்கப்பட்டதோடு, 62 பாடசாலை மாணவர்களுக்கு தமது செயற்திட்டங்களுக்காக அந்தூரியம் மற்றும் ஓகிட் பற்றிய தகவல்களும் வழங்கப்பட்டன.

## 8.3. தாவரவியல் தகவல்களை பரப்புதலும் சான்றுப்படுத்தலும்

தாவரங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய விடயங்கள் பற்றிய சரியான தாவரவியல் தகவல்கள் பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டன.

42 வெளி நாட்டவர்கள் உட்பட 1116 பேர் (பாடசாலை மற்றும் பல்கலைக் கழக மாணவர்கள்) தாவரக்கயத்தைத் தரிசித்து தகவல்களைப் பெற்றுக் கொண்டனர்.

பொதுமக்களாலும் ஏனைய சம்பந்தப்பட்டவர்களாலும் தாவரவியல் பற்றி கேட்கப்பட்டு அனுப்ப்ப்பட்ட 81 கடிதங்களுக்கு பதில் அனுப்பப்பட்டது.

அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்காக 1,183 பூக்கும் தாவர வகைகளும் 103 பன்னத் தாவர வகைகளும் 05 தாழ்நிலப் பாசித் தாவர மாதிரிகளும் அடையாளம் காணப்பட்டன.

நேச்சர்'ஸ் ஸீக்ரட் தாவர ஆய்வு நிலையத்தின் மூலம் நடாத்தப்பட்ட ஆய்வின் படி 18 தாவர மாதிரிகள் சான்றுப்படுத்தப்பட்டு, ஆயுர் வேத ஆய்வுகளுக்கான வவுச்சர் மாதிரிகளாக வைப்புச் செய்யப்பட்டன.

பேராதனைப் பல்கலைக் கழக விஞ்ஞான பீட பட்டப் படிப்பு மாணவர் ஒருவரால் சேகரிக்கப்பட்ட *Crotalaria juncea* வவுச்சர் மாதிரியாக வைப்புச் செய்யப்பட்டது.

ஹெட்டிகொட நிறுவனத்தால் நடாத்தப்பட்ட ஆய்வின் படி 10 தாவர மாதிரிகள் சான்றுப்படுத்தப்பட்டு, ஆயுர் வேத ஆய்வுகளுக்கான வவுச்சர் மாதிரிகளாக வைப்புச் செய்யப்பட்டன.

பேராதனை, பட்டப் பின் கற்கைகளுக்கான நிறுவனத்தின் பட்டப்பின் படிப்பு மாணவர் ஒருவரால் சேகரிக்கப்பட்ட *Taraxacum javanicum* தாவரத்தின் இரு மாதிரிகள் சான்றுப்படுத்தப்பட்டு, வவுச்சர் மாதிரிகளாக வைப்புச் செய்யப்பட்டன. ஹந்தான, அடிப்படைக் கற்கைகள் நிறுவனத்துக்காக *Cymbopogon nardus* தாவரத்தின் மாதிரியொன்று சான்றுப்படுத்தப்பட்டது.

கொழும்புப் பல்கலைக் கழக பட்டப்பின் படிப்பு மாணவர் ஒருவரால் சேகரிக்கப்பட்ட *Psychotria sarmentosa* சான்றுப்படுத்தப்பட்டு, தாவரக்கயத்தில் வைப்புச் செய்யப்பட்டது.

சட்டத் தேவைகளுக்காக, வன பரிபாலனத் திணைக்களத்தால் கையளிக்கப்பட்ட *Santalum album* மற்றும் *Gyrinops walla* தாவரங்களின் உடற் கூற்றியல் ஸ்லைடுகள் முறையே 56ம் 12ம் தயாரிக்கப்பட்டன.

## ஏனைய அலகுகளின் / நிகழ்ச்சித் திட்டங்களின் அபிவிருத்திப் பணிகள் 9

### 9.1. அதிமேதகு ஜனாதிபதி மற்றும் மாண்புமிகு பிரதமர் ஆகியோரது வாசஸ்தலப் பூங்காக்கள்.

கொழும்பு, கண்டி, நுவரெலியா மற்றும் அனுராதபுரம் ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள அதிமேதகு ஜனாதிபதி அவர்களது வாசஸ்தலங்களது பூங்காக்களும், கொழும்பு, நுவரெலியா ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள மாண்புமிகு பிரதமர் அவர்களது வாசஸ்தலங்களது பூங்காக்களும் உயர் தரத்தில் பேணப்பட்டன. அவற்றின் அபிவிருத்திப் பணிகள் திட்டமிடப்பட்டபடி முன்னெடுக்கப்பட்டன.



அலரி மாளிகைப் பூங்காவில் மரக்கறிகளும் பழங்களும்

உள்ளக அடிப்பாதைகளும் நில வடிவமைப்புக்களும் மேம்படுத்தப்பட்டு பூப்பாத்திகளும் விவசாயப் பாத்திகளும் அமைக்கப்பட்டன.

தேவையான உபகரணங்களும் இயந்திரங்களும் கொள்வனவு செய்யப்பட்டன.

அங்கு விளைந்த மரக்கறிகளும் பழங்களும் பயன்பாட்டுக்கும் எடுக்கப்பட்டன.



பிரதமர் வாசஸ்தலப் பூங்காவில் மரக்கறிகளும் பழங்களும்

அதிமேதகு ஜனாதிபதி அவர்களது கண்டி வாசஸ்தலப் பூங்காவிலிருந்து விழுந்த மரங்கள் அகற்றப்பட்டதோடு, நுவரெலியா வாசஸ்தல ரோசாத் தோட்டம் மேம்படுத்தப்பட்டது. மாண்புமிகு பிரதமர் அவர்களது நுவரெலியா வாசஸ்தலப் பூங்காவின் இரு குளங்களும் பொலி டனலும் புதுப்பிக்கப்பட்டன.

## 9.2. பொது நலவாய போர் சமாதிகள்

பொது நலவாய போர் சமாதிகளானவை இரண்டு உலகப் போர்களிலும் இறந்த பொது நலவாய நாடுகளின் போர் வீரர்களை நினைவு கூரும் பொருட்டு பேணப்பட்டு வருகின்றன.

இவ்வருடத்தில் கண்டி, ஜாவத்த, பொரல்ல மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங்களிலுள்ள பொது நலவாய போர் சமாதிகள் திட்டமிட்டபடி உயர் தரத்தில் பேணப்பட்டன.

இவ்வகையில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன: ஜாவத்த மற்றும் பொரல்ல போர் சமாதிகளின் புற்தரைகள் புதுப்பிக்கப்பட்டு உணவகத்துக்கான மின்சார வசதிகளும் பெற்றுக் கொள்ளப்பட்டன. ஜாவத்த போர் சமாதியின் முதலாம் பகுதிக்கான கல் வேலி இடும் பணிகள் பூரனணப்படுத்தப்பட்டன. பொது நலவாய போர் சமாதிகள் ஆணைக் குழு அன்பளிப்புச் செய்த புதிய புல் வெட்டும் இயந்திரங்கள் கையேற்கப்பட்டன. கண்டி போர் சமாதியில் மண்ணரிப்பைத் தடுப்பதற்காக 50 மீட்டர் நீளமான தடைச் சுவர் மற்றும் 130 மீட்டர் நீளமான கொங்கிரீட் வடிகால் கட்டும் பணிகளுக்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. திருகோணமலை பொது நலவாய போர் சமாதியின் முழுமையான நிர்வாகப் பொறுப்பை 2012 நவம்பர் மாதம் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் பொறுப்பேற்றது.



கண்டி போர் சமாதி



ஜாவத்த போர் சமாதி



திருகோணமலை போர் சமாதி



ஜாவத்த போர் சமாதியில் புற்தரை புதுப்பித்தல்

**9.3. தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம்**

இலங்கையின் தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியம் என்ற பெயரில் அப்போதைய விவசாய, காணி மற்றும் வனவள அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட 1995-12-15ம் திகதிய அமைச்சரவைப் பத்திரத்தை கருத்திற்கொண்டு 1996-02-07ம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியத்தை ஏற்படுத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

தாவரவியல் பூங்காக்களுக்கான நுழைவுச் சீட்டு விற்பனையின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் 25%த்தை வருடாந்தம், தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியத்திற்கான வருமானமாக ஒதுக்கீடு செய்யப்படும். நம்பிக்கை நிதியத்தின் குறிக்கோள்களாவன :

- இலங்கையிலும் மற்றும் வெளிநாடுகளிலும் எமது தாவரவியல் பூங்காக்கள் தொடர்பில் நிலவும் அபிபிராயங்களை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- சூழலியல், கல்வியியல் மற்றும் தாவரங்கள் தொடர்பில் தற்போது நிலவும் பாதுகாப்பு முறைமைகள் பற்றி அர்த்தமுள்ள நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- தாவரவியல் பூங்காக்களில் சேவையில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகளது துறைசார் அறிவு, செயற்பாடுகள் மற்றும் வசதிகளை மேம்படுத்துவதோடு உரிய செயற்பாடுகளுக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதியுதவி வழங்குதல்.
- தாவரச் சேமிப்புக் குறித்தும் முன்னேற்றகரமான வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தல்.
- தாவரவியல் பூங்காக்களின் பயன்பாட்டுக்காக சூழலியல், கல்வியியல் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பிலான தொழில்நுட்பத்துறை சார் செயற்பாடுகளை மேம்படுத்தலும் அவற்றுக்கு உதவுவதும்.
- தாவரவியல் விஞ்ஞானிகளுக்கும் மற்றும் பூங்காவிற்கு வருகைதருகின்றவர்களுக்கும் தேவையான வசதிகளைச் செய்துகொடுப்பதற்குத்தேவையான எந்தவொரு அவசர நிர்மாணாப் பணியையும்பொறுப்பேற்றல்.
- தேவையான சந்தர்ப்பகளில் மீண்டெழும்செலவினங்களுக்கான ஒதுக்கீடுகளில் ஏற்படும் குறைகளை குறை நிரப்புச்செய்தல்.

**2012ல் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள்**

| | அபிவிருத்திப் பணி | அலகு |
|---|---|---|
| 1. | தாவரவியல் பூங்காக்களின் வசதிகளை மேம்படுத்ததுல், பூங்கா அலங்கார வேலைகள் | அரச தாவரவியல் பூங்கா, பேராதனை<br>ஹக்கல தாவரவியல் பூங்கா<br>கம்பஹா தாவரவியல் பூங்கா |
| 2. | உள்ளக வீதிகளை மேம்படுத்துதல் | அரச தாவரவியல் பூங்கா, பேராதனை<br>ஹக்கல தாவரவியல் பூங்கா<br>கம்பஹா தாவரவியல் பூங்கா |
| 3. | தொழிலாளர் விடுதி புதுப்பித்தல், தொழிலாளர்களுக்கான கொட்டகை அமைத்தல் | அரச தாவரவியல் பூங்கா, பேராதனை |
| 4. | விஞ்ஞான ஆய்வுப் பணிகள் | தேசிய தாவரக்கயம் |
| 5. | ஆய்வு கூட உபகரணக் கொள்வனவு | தேசிய தாவரக்கயம் |

| | அபிவிருத்திப் பணி | அலகு |
|---|---|---|
| 6. | பயிரிடும் கருவிகள் கொள்வனவு | அரச தாவரவியல் பூங்கா, பேராதனை<br>ஹக்கல தாவரவியல் பூங்கா |
| 7. | புத்தகக் கொள்வனவு, தகவல் ஏடுகளின் பிரசுரம் | தேசிய தாவரக்கயம்<br>அரச தாவரவியல் பூங்கா, பேராதனை |
| 8. | கல்வி நிலையத்தைப் புதுப்பித்தல் | அரச தாவரவியல் பூங்கா, பேராதனை |
| 9. | கூரை புதுப்பித்தல் | தேசிய தாவரக்கயம் |

தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியத்துக்கான வருடாந்த மூலதன ஒதுக்கீடு ரூ. 81.9 மில்லியன்களாகும். அதில் அபிவிருத்திப் பணிகளுக்காக ரூ 79.2 மில்லியன்கள் (97%) பயன்படுத்தப்பட்டது.

### 9.4. மீகல்லாவ - பசுமை இல்லம்

மீகல்லாவ பசுமை இல்லமானது வலமேல் மாகாணத்தில், குருனாகலையிலிருந்து 60 மைல் தூரத்தில் அமைந்துள்ளது. மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமானதும் 06 ஏக்கர்கள் விஸ்தீரணம் கொண்ட்துமான இது 2008ல் அமைச்சினால், ஒரு பயிற்சி மற்றும் தாவர உற்பத்திக்கான நிலையமாக ஆக்கும் பொருட்டு பொறுப்பேற்கப்பட்டது. 2011ல் ஆரம்பிக்கப்பட்ட இதன் அபிவிருத்திப் பணிகள் 2012 இலும் தொடர்ந்தது. இச்செயற்திட்ட்த்தின் பிரதான நோக்கம் உள்ளகப் பணியாளர்களுக்கும் பூச்செடிச் செய்கை தொடர்பில் ஆர்வமுள்லவர்களுக்கும் சேவைக்காலப் பயிற்சி வழங்கும் நிலையமாக அபிவிருத்தி செய்வதாகும். தாவர உற்பத்து நிலையமொன்றை உருவாக்கும் திட்டமும் உள்ளது.

நீர் வழங்கள் மற்றும் பாசன முறைக்கான ஏற்பாடுகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளதோடு, அடுத்ட வருடத்துக்கான அபிவிருத்திப் பணிகளுக்கான மதிப்பீடுகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளன.

10

## வாசிகசாலை வசதிகள் மேம்படுத்தப்படல்

பின்வரும் விஞ்ஞானப் புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வாசிகசாலையின் உசாத்துணைப் பிரிவு மேம்படுத்தப்பட்டது.


1. **ரணசிங்ஹ**, D.B. 2011. Sojourns in vanishing jungles in Sri Lanka. NTD **சங்கம்**, 27/68, விஜய வீதி,கொலொன்னாவ.

2. **சேனநாயக்க,** R. 2010. Exotic medicinal plants in Sri Lanka and their uses.**பாகம்** 1, நியோ பிரின்டர்ஸ்,இலங்கை.

3. குணசேகர, L. Invasive Plants, பிரிண்ட் அண்ட் பிரிண்ட் கிரா.ஃபிக்ஸ் தனியார் நிறுவனம், மாளிகாவத்தை, கொழும்பு 10, இலங்கை.

4. மிஸ்ரா, S. 2004. Orchids of Orissa. பிஷன் சிங் மகேந்திரபால் சிங், டெஹ்ரா டன், இந்தியா.

5. மிஸ்ரா, S. 2007. Orchids of India. பிஷன் சிங் மகேந்திரபால் சிங், டெஹ்ரா டன், இந்தியா.

6. ஃப்ரேஸர் ஜென்கின்ஸ், C.R. 1977. New species syndrome in Indian pteridology and the ferns of Nepal. இண்டர்னஷனல் புக் டிஸ்ற்றிபியூடர்ஸ், டெஹ்ரா டன், இந்தியா.

7. RHS Colour Chart 2007 5ம் பதிப்பு. பூ வளர்ப்பியல் சங்கம், த.பெ.இல. 313, லண்டன்.

11

## பணியாளர் இட மற்றம், ஓய்வு, பதவி உயர்வு மற்றும் பயிற்சிகள்

### 11.1 அரச தாவரவியல் பூங்கா, பேராதனை

திருமதி. சிரீமதி மடவல அவர்கள் 2012, ஜூலை 23ம் திகதி சேவை அவசியத்தின் பொருட்டு பேராதனை அரச தாவரவியல் பூங்காவின் கல்வி நிலையத்துக்கு இடமாற்றப்பட்டார்.

மரம் வெட்டுனரான திரு. கே எம் செனவிரத்ன பண்டா 2012 ஆகஸ்ட் 23ம் திகதி கம்பஹா தாவரவியல் பூங்காவுக்கு இடமாற்றப்பட்டார்.

உதவிக் கட்டண அறவீட்டாளரான திரு. விமலசேன 2012 மார்ச் 11ம் திகதி ஓய்வு பெற்றார்.

தொழிலாளர்களான திரு. சந்திர்ரத்ன பெரேரா, திரு. பீ ஜீ. தர்மசேன ஆகியோர் முறையே 2012 மார்ச் 29, ஆப்ரல் 10 ஆகிய திகதிகளில் ஓய்வு பெற்றனர்

கட்டிடத் தொழிலாளரான திரு. சுனில் வீரசிங்ஹ 2012 ஜூலை 01ம் திகதி ஓய்வு பெற்றார்.

திருமதி. மல்காந்தி ரத்னாயக 2012 ஜூலை 23ம் திகதி நிர்வாக உத்தியோகத்தராகப் பதவி உயர்வு பெற்று அருப்பொல தொழில் நுட்பக் கல்லூரிக்குச் சென்றார்.

### 11.2. பூச்செடிச் செய்கை ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவு

திரு. ஐ. டப்ளிவ். எம். கருணாரத்ன விவசாயத் திணைக்களத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். செல்வி. நிமாலி பெரேரா கேகாலை மாவட்ட பூச்செடிச் செய்கை விரிவாக்கப் பணிகளுக்கான பட்டதாரிப் பயிலுனராக நியமனம் பெற்றார்.

### 11.3. தேசிய தாவரக்கயம்

தொழிலாலரான திரு. எச். எம். யூ. வீரசேகர பேராதனை அரச தாவரவியல் பூங்காவின் பூச்செடிச் செய்கை ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவுக்கு இடமாற்றப்பட்டார்.

### 11.4. ஹக்கல தாவரவியல் பூங்கா

திருமதி. எஸ். ஆர். தந்திரிகே 2012 ஒக்டோபர் 22ம் திகதி இடமாற்ரம் பெற்றுச் சென்றார்.

திரு. ஏ. மகாலிங்கம் 2012 செப்டெம்பர் 13ம் திகதி ஓய்வு பெற்றார்.

### 11.5. கம்பஹா தாவரவியல் பூங்கா

தொழிலாளர் திருமதி. ஜீ.எல். சுவர்ணலதா ஓய்வு பெற்றார்.

திருமதி. கே.எல். தர்மதாஸ கடமைகளைப் பொறுப்பேற்றார்

முகாமைத்துவ உதவியாளர் திருமதி. சீ.எஸ். தெனுவர இடமாற்றம் பெற திருமதி கே.டீ.எல். அமரசிங்ஹ பதவியேற்றார்.

### 11.6 பணியாளர்களது பயிற்சி மற்றும் இயலுமை விருத்தி

| | விபரம் | நிறுவனம் | நாடு | பணியாளர் |
|---|---|---|---|---|
| 1 | இல்லம் பேணல், உணவு மற்றும் பானம் | சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைக்கான இலங்கை நிறுவனம் | இலங்கை | பூங்காக்களின் சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர்கள் |
| 2 | பொது விலை மனு ஒழுங்குகள் | திறன் அபிவிருத்தி நிதியம் | இலங்கை | பூங்காப் பொறுப்பாளர்-கம்பஹா, உதவிப் பணிப்பாளர்-சுவஹஸ் மல் |
| 3 | செயலாளர்களுக்கான பிரயோகப் பயிற்சிகள் | திறன் அபிவிருத்தி நிதியம் | இலங்கை | பணிப்பாளர் நாயகத்தின் செயலாளர் |
| 4 | விலைமனு மதிப்பீடு | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் | இலங்கை | பூங்காப் பொறுப்பாளர்கள்-கம்பஹா, பேராதனை |
| 5 | நிதி முகாமையாளர்கள் அல்லாதவர்களுக்கான | இலங்கை அபிவிருத்தி நிர்வாக | இலங்கை | பூங்காப் பொறுப்பாளர்- |

| | | | | |
|---|---|---|---|---|
| | பொது நிதி முகாமைத்துவம் | நிறுவனம் | | கம்பஹா |
| 6 | அழுக்கு நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் அகற்றும் முறைகள் பற்றிய கொள்கைத் தயாரிப்பு | இக்டாட் | இலங்கை | சிவில் பொறியியலாளர் |
| 7 | உற்பத்தித் திறன் எண்னக்கருக்கள் | தொழிலாளர் கற்கைகளுக்கான தேசிய நிறுவனம் | இலங்கை | 04 முகாமைத்துவ உதவியாளர்கள் |
| 8 | சம்பள மாற்றுகை பற்றிய பயிற்சி | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் | இலங்கை | 03 முகாமைத்துவ உதவியாளர்கள் |
| 9 | கோவை முகாமைத்துவம் | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் | இலங்கை | 02 முகாமைத்துவ உதவியாளர்கள் |

12

# 2012ல் பிரசுரிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள்

1. Weeraratne, T. P., W. A. M. Daundasekera and **D.S.A. Wijesundara** (2012) Field survey of post harvest handling of cut flowers produced in the Up country of Sri Lanka for the local market . *Ceylon Journal of Science* (*Bio. Sci.*) 41 (1): 67-70, 2012.

2. Carr Gavin, David E Williams, Rukmal Ratnayake, Ratnayake Bandara, **Siril Wijesundara**, Tamsin Tarling, Aruna D Balgi, Michel Roberge, Raymond J Andersen, and Veranja Karunaratne (2012) Hortonones A to C, Hydroazulenones from the Genus Hortonia. Journal of Natural Products. 75(6):1189-91.

3. Jayalal, Udeni Pat Wolseley, Ce´cile Gueidan, Andre´ Aptroot, **Siril WIijesundara** and Veranja Karunaratne 2012. Anzia mahaeliyensis and Anzia flavotenuis, two new lichen species from Sri Lanka. The Lichenologist 44(3): 381–389

4. Rajapakse, Sanath, Prabasheeni Iddamalgoda, Rukmal Ratnayake, **D.S.A. Wijesundara**, B.M. Ratnayake Bandara and Veranja karunaratne. 2012. Evaluation of species limits of Hortonia by DNA barcoding. Journal of the national Science Foundation of Sri Lanka. Vol. 40. Number 4. 345-349

5. Seneviratna K. A. C. N., M. Daundasekera, **D. S. A. Wijesundara**, S. A. Kulasooriya, B. V. R. A. K. Jayarathna, **S. A. Krishnarajah, K. N. Yapa**; Identification of causal organisms of diseases and effect of growing media on disease severity on the export oriented foliage plant *Zamioculcas zamifolia* (Lodd.) Engl. Submitted for publication in the Journal published by the National Science Foundation.

6. Banadanayake C. U. R., **S. A. Krishnarajah** and S. E. Peiris; Investigation of the most effective fertilizer combination for sucker formation and growth of *Chlorophytum comosum* L. (Spider plant) Presented at the National Symposium on Floriculture Research 2012 and accepted for publication.

7. Madurusinghe M. A. D. N., S**. A. Krishnarajah** and Yasarathna Amarasinghe; Effect of BAP and IAA on *in-vivo* Sucker Formation and Plant Development of Spider Plant (*Chlorophytum comosum* L.) Presented at the National Symposium on Floriculture Research 2012 and accepted for publication

8. Weerasekera W. A. C. S., S. E. Peiris, K. A. C. N. Seneeviratna, **S. A. Krishnarajah and K. N. Yapa**; Effect of Chemical Treatments on Extending the Vase Life of *Ophiopogon intermedius* L., *Ophiopogon japanicus* L. and *Calathea lousiae* L. Presented at the National Symposium on Floriculture Research 2012 and accepted for publication

9. Rajamanthry R. G. L. N., H. M. I. Herath and Yasarathna Amarasinghe; Development of a Micropropgation Protocol for Bird's Nest Anthurium (*Anthurium hookeri*) Presented at the National Symposium on Floriculture Research 2012 and accepted for publication

10. Dassanayake D. M. I. C. B., M. K. Rubasinghe and D. I. M. Amararathna; Modification of Plant Architecture of Heen-Bovitiya (*Osbeckia octandra*) Presented at the National Symposium on Floriculture Research 2012 and accepted for publication

11. **Attanayake, A. M. A. S**., I. M. Turner & R. M. K. Saunders **(**2011). Two new species of *Uvaria* (Annonaceae) from Borneo, with a new nomenclatural combination. *Novon* **21:** 161-168.

12. **Wijesundara D.S.A**., H.S. Kathriarachchi, **S.W. Ranasinghe** and Hapuarachchi H., **(2012).**Analysis of Seed Plants of Sri Lanka. In: The National Red List 2012 of Sri Lanka; Conservation Status of the fauna and flora. Weerakoon, D.K. & **S. Wijasundara** Eds., Ministry of Environment, Colombo, Sri Lanka. pp. 340-345.

13. Wijesekara G.A.W., **S. Wijesundara** and **S. Ranasinghe** (2012/2011). Food Crop Wild Relatives in Sri Lanka. In: The Sri Lanka Forester (The Ceylon Forester), Vol. 32 & 33, ISSN 0258-624X, Forest Department of Sri Lanka, pp. 81-107.

14. **S. Wijesundara (2012) .**Present Status of Montane Forests in Sri Lanka. In: The National Red List 2012 of Sri Lanka; Conservation Status of the fauna and flora. Weerakoon, D.K. & **S. Wijasundara** Eds., Ministry of Environment, Colombo, Sri Lanka. x-y pp

13

## 2013 ம் ஆண்டுக்காக திட்டமிடப்பட்டுள்ள பணிகள்

| மகிந்த சிந்தனை வேலைத்திட்டம் | திட்டமிடப்பட்டுள்ள பணிகள் |
|---|---|
| சூழலியல் பாதுகாப்பு மற்றும் சூழல் நட்பு சுற்றுலாத்துறை ஊக்குவிப்புக்கான நிலையானதோர் கொள்கை | தாழ் நில உலர் வலய தாவரங்களின் பேணுகைக்கென ஆரம்பிக்கப்பட்ட மிரிஜ்ஜவில தாவரவியல் பூங்காவின் அபிவிருத்திப் பணிகளை தொடர்ந்து முன்னெடுத்தல்.<br>1. பார்வையாளர்களுக்கு வசதி செய்து கொடுக்கும் வகையில் பிரதான நுழைவாயில் கட்டிடத்தொகுதி, வாகனத் தரிப்பிடம், நிழல் இல்லங்கள், கழிவறைகள் ஆகியவற்றின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்து குடிநீர் வசதிகளையும் ஏற்படுத்துதல்<br>2. பாதை வலையமைப்பு அபிவிருத்திப் பணிகளை தொடர்தல்<br>3. பிரதேசத்தின் பூ வளார்ப்பாளர்களுக்கு வசதி செய்து கொடுக்கும் வகையில் பூச்செடி நாற்றுமேடை அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்தலும் மாணவர் உட்பட பொதுமக்களுக்கு பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதலும்<br>4. பயிரிடலும் தாவரப் பாதுகாப்பு நிகழ்ச்சிகளும்<br>5. நில வடிவமைப்பு அபிவிருத்திப் பணிகள்<br><br>தாழ்நில ஈரவலய தாவரங்களின் பேணுகைக்கென ஆரம்பிக்கப்பட்ட அவிசாவளை தாவரவியல் பூங்காவின் அபிவிருத்திப் பணிகளை தொடர்ந்து முன்னெடுத்தல்:<br>1. பிரதான நுழைவாயில் கட்டிடத்தொகுதி, பார்வையாளர் நிலையம் ஆகியவற்றின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்தல்<br>2. பாதை வலையமைப்பை அபிவிருத்தி செய்தல்<br>3. பூங்காவின் நில வடிவமைப்பு அலங்காரத்தை மேம்படுத்தும் பொருட்டு நில அபிவிருத்திப் பணிகளை மேர்கொள்ளல்<br>4. தாவர நடுகை நிகழ்ச்சித் திட்டம் மூலம் உயிர்ச் சேகரிப்பை மேம்படுத்தல் |

| மகிந்த சிந்தனை வேலைத்திட்டம் | திட்டமிடப்பட்டுள்ள பணிகள் |
|---|---|
| | 5. பிரதேசத்தின் பூ வளார்ப்பாளர்களுக்கு வசதி செய்து கொடுக்கும் வகையில் பூச்செடிச் செய்கை அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்தல் |
| உயிரியல் பல்வகைமை பாதுகாப்பை உறுதிப்படுத்துதல | 1. தாழ் நிலத் தாவரங்கள் பற்றிய ஆய்வுகளை தொடர்ந்து முன்னெடுத்தல்<br>2. இலங்கைத் தாவரங்களின் வெளிவாரிப் பேணுகை<br>3. இஞ்சி, அரத்தா போன்ற மருத்துவத் தாவரங்களின் வர்த்தக உற்பத்தியை ஊக்குவித்தல்<br>4. உலர் மற்றும் ஈர வலய அச்சுறுத்தலுக்குட்பட்டுள்ள தாவர மாதிரிகளை சேகரிக்கவும் கண்டுபிடிக்கவும் தாவரவியல் கணக்கெடுப்புகளை நடாத்துதல்<br>5. தாவர வகைப்படுத்தல், பல்வகைமை மற்றும் தொடர்புடைய விடயங்கள் குறித்து விஞ்ஞான ரீதியான ஆய்வுகளைச் செய்தல்<br>6. வரலாற்று மற்றும் மத முக்கியத்துவம் வாய்ந்த மரங்களை பாதுகாக்கும் பணியை முன்னெடுத்தல்<br>7. ஒவ்வொரு தாவரவியல் பூங்காவிலிருந்தும் குறைந்தது 10 களப் பயணங்களை மேற்கொள்ளல்.<br>8. தாவரவியல் கூட மாதிரிகளை கணணி மயப்படுத்துதல்<br>9. இலங்கையின் தாவரங்கள் குறித்த உடற்கூறியல் ஆய்வு<br>10. அரிய மற்றும் அச்சுறுத்தலுக்குட்பட்டுள்ள இலங்கைத் தாவரங்களின் நுண் தாவர உருவாக்கம் குறித்த ஆய்வுகளை ஆரம்பித்தல் |
| பூச்செடிச் செய்கை விவசாயிகள் தொழில் நுட்பம் மற்றும் ஏனைய தேர்ச்சிகள் மூலம் பலப்படுத்தப்படுவர் | 1. பூச்செடிச் செய்கை அபிவிருத்தி தொடர்பான ஆய்வுகளைச் செய்தல்<br>2. பூச்செடிச் செய்கை அபிவிருத்தி தொடர்பான இயலுமையை அதிகரிக்கும் பொருட்டு பூ வளர்ப்பாளர்களுக்கு |

| மகிந்த சிந்தனை வேலைத்திட்டம் | திட்டமிடப்பட்டுள்ள பணிகள் |
|---|---|
| | பயிற்சிகளையும் செயலமர்வுகளையும் நடாத்துதல்<br>3. பூ வளர்ப்பாளர்களது சந்தைப்படுத்தல் இயலுமையை மேம்படுத்த கண்காட்சிகளை ஒழுங்குசெய்தல்<br>4. பூ வளர்ப்பாளர்களுக்கு புதிய இனங்களின் தரமுயர்ந்த தாய்த் தாவரங்களை வழங்குதலும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை அறிமுகப்படுத்தலும்<br>5. "சுவஹஸ் மல்" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பூ வளர்ப்பவர்களது நாற்று மேடைகளைத் தரிசித்து கள ஆலோசனைகளை வழங்குதல்.<br>6. தாவரவியல் பூங்காக்களின் உள்ளேயும் வெளியேயும் பூச்செடிச் செய்கை, சூழல் பாதுகாப்பு என்பன குறித்து கண்காட்சிகளை நடாத்துதல்<br>7. பூச்செடிச் செய்கை மற்றும் நில அலங்காரப் பூங்காவியல் குறித்து பிரசுரங்களை வெளியிடல், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல்.<br>8. பூச்செடிச் செய்கையாளர் சங்கங்களை உருவாக்குதல்<br>9. நாட்டில் பூச்செடிச் செய்கைக் கைத் தொழிலை ஊக்குவிக்க நிகழ்ச்சித்தட்டங்களை அமுல் படுத்துதல்<br>10. கொழும்பில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த்த இடமொன்றில் வெட்டுப் பூக்கள் விற்பனை நிலயமொன்றை நிறுவுதல்<br>11. தாவர வகைப்படுத்தல், பேணுகை, உயிரியல் பல்வகைமை தொடர்பான கல்வி/ பயிற்சி நிகழ்ச்சிகளையும் செயலமர்வுகளையும் நடாத்துதல் |
| அலங்கார தாவரங்கள் பற்றிய நீண்ட கால மற்றும் குறுங்கால ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தல். | 1. தேசிய மட்டத்தில் புதிய மாற்றுத் தாவரங்களையும் காட்டுத் தாவர வகைகளையும் கண்டறிந்து |

| மகிந்த சிந்தனை வேலைத்திட்டம் | திட்டமிடப்பட்டுள்ள பணிகள் |
|---|---|
| | அறிமுகப்படுத்தல்<br>2. புதிதாகக் கண்டறியப்பட்ட தாவரங்களதும் பொதுவாக வளர்க்கப்படும் அலங்காரத் தாவரங்களதும் விவசாயவியல் பற்றி ஆய்வு செய்தலும் அபிவிருத்தியும். பூச்செடியியல் பயிர்களுக்கான உயிரியல் பசளைகளைப் பரிந்துரைத்தல்.<br>3. பூச்செடியியல் பயிர்களின் அறுவடைக்கு முந்திய மற்றும் பிந்திய தொழில் நுட்பங்கள் பற்றியஆய்வு.<br>4. திசு உருவாக்கம், உயிரியல் தொழில்நுட்பம் பற்றிய ஆய்வுகளைச் செய்தல்.<br>5. பூச்செடியியல் இயலுமை கொண்ட நீர்த் தவரங்கள் பற்றிய ஆய்வுகளைச் செய்தல்.<br>6. நோய், பீடைகள் பற்றிய ஆய்வுகளைச் செய்தல்.<br>7. பூ அறிமுக தொழில்நுட்பங்கள் பற்றிய ஆய்வுகளைச் செய்தல். |
| வாழ்வாதார தேர்ச்சிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்படும். | 1. பூச்செடிச் செய்கை மற்றும் தாவரப் பேணுகை குறித்த 03 மாத, ஒரு வருட, இரு வருட கற்கை நெறிகளை நடாத்துதல்.<br>2. பூச்செடிச் செய்கை, அலங்கார தாவரவியல் மற்றும் தாவரப் பேணுகை குறித்த ஆலோசனை சேவைகளை வழங்குதல். |